கிறிஸ்மஸ் சிறப்பிதழ் இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


# பாதுகாவலன்

## PAATHUKAVALAN


Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 Fax: 021 - 222 9041, ISSN 1391-7633

மலர் : 138 இதழ் : 23 திகதி : 25-12-2014 விலை : 30.00



புத்தாண்டில் குடும்பங்களில் அர்ப்பணவாழ்வும்
புனிதமும், பகிர்தலும் நிறைந்திட ஆசிக்கின்றேன்



குடும்பமும் அர்ப்பண வாழ்வும்

**2015**

நமது காலப் பெருவெளியில்
ஒளிக்கீற்றுகள் தெறிக்க
அற்றைத் திங்கள் அமாவாசை
இற்றைத் திங்களில் பௌர்ணமியாக
பரன் மகனின் பிறப்பும்
புனித யோசப் வாஸின் ஆசீரும்
திருத்தந்தையின் திருப்பயணமும்
தரையிறங்கும் தேசத்தின் தலைமைத்துவமும்
இன்பக் கானான் வாழ்வை
2015இல் மக்களுக்கு நல்கிட
அதோ!
பெத்லகேமின் வால்வெள்ளி
இலங்கையின் மீதும்...



நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்

கிறிஸ்துவை அனுபவித்து ஆறுதல் பெறுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது எண்ணம்

## புத்தாண்டில் திருத்தந்தையின் வருகையுடன் புதிய அரசியல் கலாசாரம் உருவாகட்டும்

வாக்குக் கேட்க வருகின்ற அரசியல்வாதிகளுக்கு மக்கள்தான் பாடம் கற்பிக்க வேண்டும். ஏனெனில் மக்கள் வாக்களிப்பார்கள் என்று நம்பியே அவர்கள் தாங்கள் நினைத்தபடி கட்சி மாறுகின்றனர். வாக்களிப்பின் போது மக்கள் சரியான தீர்ப்பு வழங்கினால் இந்தக் கட்சித் தாவல்களை நிறுத்தலாம். அது மாத்திரமல்ல பொய்யான வாக்குறுதிகள் வழங்குவதையும் தடுக்கலாம் என்ற கருத்துக்களும் விமர்சனங்களும் இன்று நம் மத்தியில் காணப்படுகின்றன. யேசுபாலன் பிறந்த இந்த மாதத்தில் நேர்மையான செயற்பாடுகளுக்கு முக்கியமளிக்க வேண்டும்.

திருத்தந்தையும் ஜனவரி மாதம் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளார். இந்த நிலையில் அரசியல்வாதிகள் நிலை தடுமாறி மக்களையும் ஏமாற்றி திருத்தந்தையின் புனிதப் பயணத்தையும் அர்த்தமற்றதாக்கி விடுமோ என்ற அச்சம் எல்லோரிடமும் ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசியல் வரலாற்றில் 1935ஆம் ஆண்டு லங்கா சம சமாஜ கட்சி ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் கட்சித் தாவல்கள் இடம் பெற்றன. ஆனால் அக்காலப்பகுதியில் கட்சித் தாவல் என்பதைவிட கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் புதிய கட்சி ஒன்றை அமைத்து புதிய கொள்கை ஒன்றை வகுத்து செயற்பட்டார்கள். ஆனால் இன்று அந்த ஜனநாயகப் பண்பு இல்லை. ஒரு கட்சியில் இருந்து இன்னுமொரு கட்சிக்கு பெருமளவு பணத்தைப் பெற்றுக் கொண்டு தாவிச் செல்வது அங்கு பெரிய பதவி ஒன்றை வகிப்பது என்ற நிலைதான் உள்ளது.

இனவாதத்தை மூலதனமாகக் கொண்டுதான் சிங்களக் கட்சிகளினுடைய செயற்பாடுகள் நாளுக்குநாள் தீவிரமடைகின்றன. உதாரணமாக தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேசினால் நாடு பிரிந்து விடும் என எதிரணியும், மைத்திரிபால சிறிசேன பேசினால் தமிழ் ஈழம் மலரும் என அரசாங்கமும் கூறுகின்றது. இதன் பின்புலத்தில் நின்றுகொண்டு ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பான அறிவிப்பை வெளியிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயக்கம் காண்பிக்கிறது என்ற முடிவுக்கு வரலாம்.

எவ்வாறாயினும் கொழும்பை மையமாகக் கொண்ட சிங்கள அரசியல் கட்சிகளின் கட்சித் தாவல்களும் அவர்களின் கருத்து வெளிப்பாடுகளும் இனவாதத்தின் அளவுகோலை மையமாகக் கொண்டதுடன் சிங்கள மக்களையும் அந்த இனவாதத்திற்கு பழக்கி எடுக்கின்ற போக்கும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. இந்த இடத்தில் இலங்கையில் எது ஜனநாயகம் என்ற கேள்வி எழுகின்றது.

தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து கட்சிகளுக்கும் சம அந்தஸ்து உள்ளது. இது உலகின் பொதுவான பண்பு. ஆனால் இலங்கையில் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளிடையே சமநிலை அந்தஸ்து இருப்பதாகக் கூற முடியாது. அரசியல் கட்சி என்பது சிறியதாக இருக்கலாம், பெரியதாக இருக்கலாம் ஆனால் அரசியல் கட்சி என்ற வரையறைக்குள் அனைத்து கட்சிகளையும் சமநிலை அந்தஸ்தாக பார்க்கும் பண்பு நமது நாட்டு அரசியல்வாதிகளிடையே இல்லை.

அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று சிங்கள இனவாதக் கட்சிகளின் தோற்றம். இரண்டாவது தேசியகட்சிகள் என்ற அந்தஸ்தில் இருந்து விலகியதுடன் இனவாதத்தை மூலதனமாக கொண்டு பிரதான கட்சிகளான ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் செயறபடுகின்றமை. ஆகவே கட்சித் தாவல்களுக்கு இந்த இரு காரணங்களும் பிரதானமாக இருக்கின்றன என்ற முடிவுக்கு வரலாம். ஒவ்வொரு அரசியல் கட்சிகளுக்கும் யாப்புகள் உண்டு.

ஆனால் இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் தாங்கள் கட்சிகளுக்குரிய யாப்புகளின் பிரகாரம் செயற்பட முடியாத நிலைமைதான் உள்ளது. ஏனெனில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழ் நீதித்துறையும் உள்ளடங்கி இருப்பதால் பாதிக்கப்பட்ட எதிர்க்கட்சிகள் நீதிமன்றங்களில் நீதியை எதிர்பார்க்க முடியாத நிலைதான் உள்ளது. ஆகவே பிறந்துள்ள குழந்தை இயேசு கொணரும் நீதியோடு கூடிய நிலையான அமைதி இலங்கை தீவினில் தங்கவும் புத்தாண்டில் திருத்தந்தையின் வருகையுடன் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்கவும் அனைத்து தரப்பும் முன்வரை வேண்டும்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# அலட்சியம் செய்யப்படும் மனித உயிர்மட்டிலும், சமூக, கலாசார சீரழிவுகள் மட்டிலும் நாம் விழிப்புள்ளவர்களாக மாறவேண்டும்

- இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் கிறிஸ்மஸ் செய்தி -

மனிதனுடைய வரலாற்றில் இயேசு இறைமனிதனாக அவதரித்தது தனது முழுமையான இறைவாழ்வில் எல்லா மனிதரும் பங்கெடுக்க வேண்டுமென்பதற்காகவே. இந்த வாழ்வின் முழுமையை வழங்கக் கூடியவரும் அவர் ஒருவரே (யோவான் 10:10). மனிதராகிய நாம் இவ்வுலகில் எமது வாழ்வை முழுமையாக அர்த்தமுள்ளதாக வாழ வேண்டுமென்பதும். அதன் நிறைவில் நித்தியத்துக்கும் தனது இறை வாழ்வில் பங்கு கொள்ள வேண்டுமென்பதுமே இயேசு மனிதனாக வந்ததின் அடிப்படை நோக்கமாகும். எனவேதான், கிறிஸ்துபிறப்புக் கொண்டாட்டம் வெறுமனே ஒரு வரலாற்று நிகழ்வை நினைவு கூர்ந்து செய்கிற ஒரு நிகழ்வு அல்ல. மாறாக, கிறிஸ்து எம் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட வாழ்வில் வந்து பிறக்க விரும்பும் நிகழ்வேயாகும்.

எனவே, கிறஸ்மஸ் நாம் கிறிஸ்துவை எமது வாழ்வில், எமது குடும்பங்களில், எமது சமூகங்களில் வந்து பிறக்குமாறு அழைப்பு விடுக்க எமக்கு ஞாபகப்படுத்துகிறது. நசரேத்தில் தொழுவத்தில் பாலன் இயேசுவின் எளிமையான பிறப்பு நாம் எல்லோரும் மனமாற்றமடைந்து எல்லாருடைய தேவைகளிலும் பாரபட்சமில்லாத வகையில் உதவிக்கரம் நீட்ட முன்வர வேண்டும் என்று அழைத்து நிற்கின்றது. எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் எல்லா மக்கள் மத்தியிலும் நீதியை, அமைதியை, ஒன்றிப்பை நிலைநாட்ட நாம் அனைத்து தடைகளையும் உடைத்தெறிந்து செயலாற்ற முன்வர வேண்டும் என்று நினைவுறுத்துகிறார். திருத்தந்தையின் இவ்அறைகூவல் தேர்தலை எதிர் கொள்ளும் எமக்கு மிகவும் பொருத்தமானதாகும். நாம் ஒரு நீதியான, அமைதியான சமூகத்தைக் கட்டியெழுப்ப நாம் எடுக்கின்ற தீர்மானத்தை வெளிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக இத்தேர்தலைப் பயன்படுத்த நமக்கு வாய்ப்பளிக்கின்றது. புனிதமானவையாகக் கருதப்படுகின்ற மனித வாழ்வையும் மனித மாண்பையும் கட்டியெழுப்புகின்ற ஒரு நீதியான, நேர்மையான மனித சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே இயேசு அறிவிக்கின்ற நற்செய்தியின் சாராம்சமாகும்.

ஏழ்மையாகப் பிறந்த இயேசுவைக் காணும்போது நாம் ஏழைகள்பால் காட்டவேண்டிய அக்கறையையும், எம் சமூகத்தில் பல்வேறு வகைகளில் துன்புறுவோர் மட்டில் கொள்ள வேண்டிய கரிசனையையும் நினைவிலிறுத்த வேண்டும். அத்துடன் அலட்சியம் செய்யப்படும் மனித உயிர்மட்டிலும், சமூகங்களில் தோன்றியுள்ள கலாசார சீரழிவுகள் மட்டிலும் நாம் விழிப்புள்ளவர்களாக மாறவேண்டும். இறைவனின் திட்டத்துக்கு எதிரானவை எனக் கருதப்படுகின்ற அனைத்தையும் புறந்தள்ளி, சமாதானம், ஒருமைத்துவம், ஒப்புரவு ஆகியவற்றை முன்னெடுக்கும் முகவர்களாக நாம் எம்மை அர்ப்பணிக்க முன்வர வேண்டும்.

பாலன் இயேசு என்னும் அழகிய கொடைக்காக இறைவனுக்கு நன்றி கூறும் அதே வேளை, அதே கிறிஸ்துவின் உயிருள்ள சாட்சிகளாக தூய ஆவியால் புதுப்பிக்கப்பட்டு வாழ இறைவரம் வேண்டுவோம்.

இறை மக்களாகிய உங்களுக்கும் மற்றும் நல்மனத்தோர் அனைவருக்கும் ஆசீர்வாதங்கள் நிறைந்த கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

# வன்முறைகளற்ற தேர்தலையும், திருத்தந்தையின் வருகையின்போது அமைதியையும் ஆசிக்கின்றோம்!

- இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை -

வருகிற ஜனவரி மாதம் 8ம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் நெருங்கும் இவ்வேளையில், தேசம் எதிர்கொண்டுள்ள முக்கியமான பிரச்சனைகளுக்கு அரசியல் இதய சுத்தியோடும் திடசங்கற்பத்தோடும் அவசரமான தீர்வு காணப்பட வேண்டிய விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியதே உடனடியான தேவையாகும். எனவே, தேர்தலுக்கு முன்னதாகவும் பின்னதாகவும் வன்முறைகள் இடம்பெறுவது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். வேட்பாளர்கள் பற்றியோ கட்சிகள் பற்றியோ வெறுப்பான பிரச்சாரங்களைத் தவிர்த்து ஒவ்வொரு வேட்பாளரினதும் கொள்கைகள் பற்றிய ஒரு முதிர்ச்சியான அறிவூட்டலை மக்களுக்கு வழங்க வேண்டும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வருகை தேர்தல் முடிந்தவுடன் உடனடியாக இடம்பெற இருப்பதால இவ்ஆண்மீக நிகழ்வு எவ்வித குழப்பமுமின்றி ஒரு அமைதியான சூழலில் சிறப்பாக நடைபெறுவதை உறுதிப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் நாம் வலியுறுத்திக் கேட்கின்றோம். அதேவேளையில் திருத்தந்தையின் வருகையை எவ்விதத்திலும் அரசியல் மயப்படுத்த முயலவேண்டாம் என்றும் அனைத்து வேட்பாளர்களையும் மிகவும் வலியுறுத்திக் கேட்கின்றோம்.

ஒரு நேர்மையான சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதற்குத் தேவையான ஜனநாயகக் கொள்கைகளையும் உறுதியான வெளிப்படையான செயல்பாடுகளையும் கடைப்பிடிக்க சம்பந்தப்பட்ட அனைவரும் முன்வர வேண்டுமென்று இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை விரும்புகிறது. அத்துடன் தேசத்தின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான தத்தமது கொள்கைகளை வெளிப்படையாக சுதந்திரமாக எடுத்துரைக்கக் கூடியதான ஒரு இயல்பு நிலையை ஏற்படுத்துவதும் நேர்மையான சுதந்திரமான தேர்தலுக்கு அவசியமானதாகும். யார் வெற்றி பெற்றாலும் நாட்டின் சட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அத்துடன் 17வது திருத்தத்தின்படி, பங்கெடுக்கும் ஜனநாயகத்துக்கான வழியைத் திறந்து விட அவசியமான சுதந்திர ஆணையங்கள் தேர்தல் முடிந்தவுடன் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும். இவற்றோடு கூட, இந்நாட்டின் எல்லாக் குடிமக்களும் மாண்போடும் சமத்துவத்தோடும் வாழ ஏதுவாக சமாதானத்தையும் ஒப்புரவையும் ஏற்படுத்த தம்மை நிறைவாக அர்ப்பணிக்க வேண்டுமென்றும் விரும்புகிறோம்.

நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் தனது வாக்கை முழுமையான சுதந்திரத்தோடு எவ்வித பயமோ வற்புறுத்தலோ இன்றி பயன்படுத்துகின்ற மறுக்க முடியாத உரிமையுடையவர் என்பதையும் இங்கு இடித்துரைக்க விரும்புகிறோம். தேர்தலை நடத்தும் பொறுப்புள்ளவர்கள் ஒரு உயரிய நிலை நீதியை கடைப்பிடிக்கத் தேவையான அனைத்து ஆதரவும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

திருச்சபையின் போதனைகளுக்கு அமைவாக இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை நாட்டிலுள்ள அனைத்து கத்தோலிக்க மக்களையும், ஏனைய மக்களையும் தமது பரிசுத்தமான ஜனநாயக உரிமையான வாக்களிக்கும் உரிமையை எதிர்வரும் தேர்தலில் தவறாது பயன்படுத்துமாறு வலியுறுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்மஸ் வர்த்தகமா? களியாட்டமா? ஆடம்பரமா?...

உலகளாவிய ரீதியில் சாதி, இனம், மதம், மொழி ஆகிய வேறுபாட்டைக் கடந்து, அனைவரும் மகிழ்ச்சியாக, சந்தோஷமாக, குதூகலமாகக் கொண்டாடுகின்ற விழாவாகக் கிறிஸ்மஸ் பண்டிகை துலங்குகின்றது. கடவுளுடைய வார்த்தை என்ற ஆங்கிலப் புத்தகத்திலே பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

"மற்றெல்லா திருவிழாக்களையும் விட வித்தியாசமான ஒரு இன்பத்தை அனுபவிக்கின்றோம் என்று ஒருவர் சொல்லுமளவு இந்தக் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா நெஞ்சுக்கு மிக நெருக்கமான ஒரு இன்பத்தை அளிக்கிறது. மிகவும் முக்கியமானதும் மிகவும் சிறப்பு மிக்கதுமான ஒன்றை இந்த விழாவிலே நாம் நினைவு கூருகிறோம் என்பதை, எமது மதத்தை அல்லது விசுவாசத்தைச் சேராத மக்களும்கூட உணர்ந்து கொள்வது போலத் தோன்றுகிறது!"

உண்மையாகவே இந்தப் பண்டிகையானது ஏனைய விழாக்களைவிட அதி உச்சகட்ட உணர்வோடு கலந்த பெரு மகிழ்ச்சியை அளிக்கின்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இந்த மகிழ்ச்சியின் பெரும் ஆரவாரம் மார்கழி மாதம் பிறந்தவுடனேயே ஆரம்பமாகும். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல வளர்ந்தவர்களுக்கும் குறிப்பாக சிறையிலிருப்போர், நோய்வாய்ப்பட்டிருப்போர், கைவிடப்பட்டோர், வயோதிபர், அநாதைகள் மற்றும் மாற்றுவலுவுடையோர் அனைவரும் தங்களுடைய துன்பதுயரங்களிலிருந்து ஆறுதல் பெற்று மகிழ்ந்திருக்கவும் வழிசமைத்துக் கொடுக்கிறது.

இந்த மகிழ்ச்சியான கிறிஸ்மஸ் பண்டிகையின் நோக்கமானது நாங்கள் அனைவரும் கடவுளுடைய பிள்ளைகள் ஆகுமாறு, கடவுள் எங்களைப் போன்ற ஒருவராக இந்த மண்ணில் அவதரித்த நிகழ்வை நினைவுகூர்ந்து கொண்டாடுவதாகும். இதனை யோவான் நற்செய்தியாளர் கூறுகையில், "வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம்" (யோ1.14). என்றும் "அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார்" (யோ1.12) என்றும் குறிப்பிடுகிறார். கிறிஸ்மஸ் பண்டிகையானது கிறிஸ்து பிறந்து 330 ஆண்டுகளுக்குப் பின்னர் மார்கழி மாதம் 25ம் திகதி உரோமாபுரியில் ஆரம்பிக்கப்பட்டு கொண்டாடப்பட்டது. இதற்குப் மிகப்பழமையான சான்றுகளும் குறிப்புகளும் பல உள்ளன. இவற்றை நான் இங்கே குறிப்பிடவில்லை. மாறாக கிறிஸ்து பிறப்பின் திருநாளை முன்னிட்டு ஏற்படுத்தப்படும் நிகழ்வுகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே என்னுடைய எதிர்பார்ப்பாக உள்ளது.

காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள . நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி ஒன்று உதித்துள்ளது" என்று எசாயா இறைவாக்கினர் முன்னுரைத்தது இந்த இயேசுகிறிஸ்துவைப் பற்றியே இவரின் பிறப்பினால் சாவிலிருந்து வாழ் வுக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், பாவத்திலிருந்து தூய்மையான வாழ்வுக்கும் அழைத்து வரப்பட்டார்கள்.

இந்தப் பிறப்பு விழாவைத்தான் உலகம் முழுவதும் எல்லோரும் கொண்டாடுகிறார்கள். இது கிறிஸ்தவ மக்களுக்குரிய விழாவாகவிருந்தாலும் இதனை அனைவரும் கொண்டாடுகின்ற வழக்கம் நாளடைவில் வளர்ந்து கொண்டே வருகின்றன. இதனால் உண்மையான நோக்கம் மறைக்கப்பட்டு வர்த்தகமாகவும், களியாட்டமாகவும், ஆடம்பரமாகவும் கிறிஸ்மஸ் பண்டிகை மாறி விட்டது. பாலகன் இயேசு கொண்டு வந்த உண்மை, அன்பு, நீதி, சமத் துவம், சகோதரத்துவம், மகிழ்ச்சி எல்லாமே குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது. மனிதர்கள் பணத்துக்கும், பண்டங்களுக்கும், போதைப்பொருட்களுக்கும், பாலியல் இன்பங்களுக்கும் அடிமையாகி வாழ்வின் அர்த்தம் புரியாதவர்களாக அலைந்து திரிகிறார்கள்.

கெ.இரோனியஸ்
தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி

ஆலயத்தின் செயற்பாடுகளுக்கு அப்பால் கிராமத்து பொது அமைப்புக்களும், குறிப்பிட்ட குழுக்களும் கிறிஸ்து பிறப்பின் நிகழ்வை அறிவிக்கும் கிறிஸ்மஸ் தாத்தா Carol நிகழ்ச்சியை தாங்கள் முன்னெடுத்து, அதனை தங்களுடைய பொது அமைப்புக்கு பணம் சேகரிக்கும் ஒரு வாடிக்கையாக மாற்றிவிட்டார்கள். இது தவறான ஒரு காரியம் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த செயற்பாட்டை உடனடியான நிறுத்துவதற்கு ஆலய நிர்வாக சபையினதும், பங்கு மக்களும் பங்குத்தந்தையுடன் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்.

கிறிஸ்மஸ் பண்டிகையின் போதும், புதுவருடத்தின் போதும் வாண வேடிக்கைகள், மத்தாப்புக்கள், வெடிகள் கொளுத்துவது வழமையான ஒன்றாக இருந்தாலும், இது இன்று சிறுவர்கள், இளைஞர்கள், குழுக்கள் மத்தியில் போட்டியை ஏற்படுத்தி குடும்பப் பிரச்சினையாகவும், குழு மோதல்களாகவும், இடம் பெற்று உயிர் அச்சுறுத்தல்களும் தொடர்கின்றன. இது வேறு மத்தினரோ அல்லது குழுக்களோ அல்ல. மாறாக அந்தந்த கிராமங்களை அல்லது ஆலயங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு செயற்படுகின்றனர் என்பது மிகவும் வருத்தமளிக்கும் காரியமாகவுள்ளது.

மேலும் கிறிஸ்மஸ் பண்டிகை என்று சந்திக்குச் சந்தி இளைஞர்கள் குழுக்களாக கூடி, ஒலிபெருக்கிகளில் பாடல்களை இசைத்து நடனமாடி, குடித்துக் கும்மாளம் அடிப்பது வீதிகளில் பயணிப்போருக்கு இடையூறான ஒரு செயற்பாடாகவுள்ளது. இது கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் நகரப் பகுதிகளிலேயே அதிகம் இடம் பெறுகின்றது. இது கத்தோலிக்க மதத்தினருக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் செயற்பாடாக உள்ளது. எனவே இது குறித்து நகரவாசிகள் அக்கறை கொண்டு, கத்தோலிக்க மதத்தினருக்கு ஏற்படும் அபகீர்த்தியை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆலயங்களில் இரவு வழிபாடுகள் இடம் பெறும் வேளைகளில் ஆலய வளவுக்குள்ளோ அல்லது அதன் அருகாமையிலோ வெடிகளை வீசுவது விசமிகளின் செயற்பாடுகளாகவுள்ளது. இது குறித்து விழிப்பாகவிருந்து இதனை செயற்படுத்துகின்றவர்களுடன் உரையாடி நல்லதொரு முடிவுக்கு வர வேண்டுமென்று ஆலய மக்களை கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஆலயவழிபாட்டு வேளையில் வெடி கொளுத்தி கிறிஸ்து பிறப்பின், புதுவருடத்தின் மகிழ்ச்சியை கொண்டாடுவது தேவைதானா?.... என்பது என்னுடைய ஆதங்கமாகவுள்ளது.

இந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஆலய மணிகள் எல்லாவற்றையும் உரத்து ஒலிக்க வைத்தால் அதுவே போதும் என்பது என்னுடைய எதிர்பார்ப்பாகவுள்ளது. இல்லாதவிடத்து திருப்பலி வேளைகளில் வெடி கொழுத்துவதை நிறுத்தி, திருப்பலியின் நிறைவில் ஆலய முன்றலிலோ அல்லது பொதுவான ஒரு இடத்திலோ அதனை வாண வேடிக்கையாகக் காண்பித்து கிறிஸ்து பிறப்பின், புதுவருடத்தின் மகிழ்ச்சியை அனைவரும் ஒரே இடத்தில் அனுபவிக்க பங்குச் சமூகம் சந்தர்ப்பம் ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு செயற்பட்டால் ஏற்படுகின்ற பல அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மேலும் ஆலயங்களில் இடம்பெறும் ஒளிவிழா நிகழ்வானது குறிப்பாக சிறுவர்களுக்கு என்று மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டது. எனவே சிறுவர்கள் அனைவரும் பங்கெடுக்க பங்குச் சமூகம் ஆவன செய்ய வேண்டும். இது ஆடம்பரமாகவோ அல்லது செலவுக்கு அதிகமாகவோ இல்லாமல் மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கு மேற்கொள்ளப்பட வேண்டும். கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு அளவுக்கு அதிகமாக, தேவையற்ற விதமாக பணங்களை சேகரிப்பது தவிர்க்கப்பட வேண்டும். திருச்சபையின் தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருச்சபையை எளிமையான வாழ்வுக்குள் வழிநடத்தி ஏழைகளதும், தேவையில் உழல்பவர்களதும் வாழ்வை உயர்த்தும் பணியிலே ஈடுபடும்போது, நாங்களும் அவரோடு சேர்ந்து ஒத்துழைக்க வேண்டாமா?

கிறிஸ்து இந்த உலகத்திற்கு, ஒளியாக, வழியாக, உண்மையாக வந்துதித்தார். அவரால் இந்த உலகமும், மக்களும் மீட்படைந்தார்கள். அந்த மீட்பர் இன்றும் எங்களோடு வழிநடக்கிறார். எனவே காலத்தின் தேவையை உணர்ந்து, தெளிந்த அறிவோடு, மகிழ்ச்சியாக, அமைதியாக, சகோதரத்துவ உணர்வோடு பொருளுணர்ந்து கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடுவோமா? ■

## 'கிறிஸ்மஸ்' வார்த்தையின் பொருள்

முதன் முதலில் கிறிஸ்மஸ் என்ற வார்த்தை, எகிப்தில் உபயோகிக்கப்பட்டதாக பொதுவாகக் கருதப்படுகிறது. இதற்கு 'கிரிஸ்ட்' (Krss) என்பதற்கு 'எண்ணெய் வார்க்கப்பட்ட' அல்லது 'அபிஷேகப்பட்ட' என்றும் மெஸ் (Mes) என்பது எகிப்தியர்கள் ஆண்டிற்கொரு முறை உண்டாக்கிய புனித கேக்கையையும் குறித்தது. இந்தக்கேக் அமனிட்டாமஸ் காரிறா (Amanita Muscacir) என்ற சிவப்பு வெள்ளைக் காளான்களால் தயாரிக்கப்பட்டது. இந்த சிவப்பு, வெள்ளை காளான்கள் குளிர்காலத்தில் பைன் மரங்களின் அடியில் வளர்ந்தது. சிறப்பான இந்த காளான்களைப் பறிக்க வருபவர்கள் அந்த காளான்களின் அடியில் பரிசுப்பொருட்களையும் கண்டெடுத்தார்கள். பொதுவாக இந்த பரிசுப் பொருட்கள் கிறிஸ்மஸ் தாத்தா போட்டுச் சென்றதாக கருதப்பட்டது. அதனடிப் படையில்தான் கிறிஸ்மஸ் தாத்தா சிவப்பு வெள்ளை ஆடையணிவது வழக்கமாக்கப்பட்டது.

## காளையும் கழுதையும்



குடில் என்றால் இயேசு குழந்தை, மரியாள், சூசை, ராஜாக்கள் மட்டும்தானே ஞாபகத்திற்கு வரும். உங்கள் வீடுகளில் அமைக்கப்பட்டுள்ள குடிலைப் பாருங்கள். அங்கு காளையும், கழுதையும் குடிலில் இருப்பதைக் காணலாம். எனினும் அவை குடிலில் இருப்பது ஒரு மிகப் பெரிய அடையாளமாகத்தான். என்ன என்கிறீர்களா? எசா 1.3 இன்படி காளை தன் உரிமையாளனை அறிந்து கொள்கிறது. கழுதை தன் தலைவன் தனக்கு தீனி போடும் இடத்தை அறிந்து வைத்துள்ளது. ஆனால் இஸ்ரேயலோ என்னை அறிந்துக் கொள்ளவில்லை என்று கடவுளின் ஏக்கத்தை வெளிப்படுத்துகிறார். இவ் இறைவாக்கினர் சுட்டிக் காட்டிய காளை இஸ்ராயேலின் மீட்பருக்காக காத்திருப்பதையும் கழுதை பணிபுரியத் தாழ்ச்சியுடன் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதையும், இஸ்ரயேலர் இல்லாத மற்ற இனத்தவரையும் குறிக்கிறது.

## கிறிஸ்மஸ் கெரோல்



கிறிஸ்மஸ் கெரோல் பாடும் வழக்கம் 13ம் நூற்றாண்டில் ஆரம்பமானது. எனினும் 19ம் நூற்றாண்டுகளில் தான் அதன் முக்கியத்துவம் அதிகரித்தது. கெரோல் பொதுவாக ஒரு தலைமைப் பாடகரின் தலைமையிலான ஒரு பாடல் குழு கிறிஸ்து பிறப்பின் விழாவை அல்லது குளிர்காலத்தை மையமாக வைத்து பாடப்படும் தேவார வகையாகும்.

ஞானராஜா றொகான்,
புனித மடுத்தீனார் குருமடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனுமகனின் பிறப்பு மனுக்குலத்தின் மீட்புக்காகவே"

இவ்வுலகமானது நவீனத்துவத்திலும் நாகரிகத்திலும் உச்சநிலையை எட்டிப்பிடிக்கும் நோக்கோடு ஓடிக்கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். பார்க்கின்றோம். கேட்கின்றோம்.

அதாவது வடக்கின் வசந்தங்களாக வியாபித்து வரும் அபிவிருத்திகள். இலகுவான தொழில் நுட்பங்களின் வேலைப்பாடுகளுடனான கண்டுபிடிப்புகள், நுட்பமான கருவிகள், மக்கள் மனம் கவரும் ஆடம்பரமான விளம்பரங்கள். போஸ்ட்டர்கள், கவர்ச்சிகரமான லேபிள் இடப்பட்ட பொருட்கள். சுவையூட்டியதும், மனித உடலுக்கு தீங்கினை ஏற்படுத்தக்கூடிய இரசாயன கலப்படமான உணவுப் பண்டங்கள் வர்த்தக நோக்கங்களை மேம்படுத்தும் முகமாக அவ்வப்போது காளானைப்போல் முளைக்கும் என்பவற்றின் விருத்திகள். பூகோளத்தின் உருவத்தையே சுருக்கிக் கொண்டுவிட்ட தொலைத்தொடர்பு சாதனங்களான (கையடக்கத் தொலைபேசி, Intenet, Skype, E-Mail போன்றவற்றின் அதிவேக வளர்ச்சிக ள், வீதி அபிவிருத்திகள் போன்றவற்றின் அதிவேக வளர்ச்சியடையும் அதேவேளை இரகசியமான கட்டாயப்படுத்தப்படும் வன்முறைகளான இளைஞர் குடி போதைக்கும், கடத்தல்களுக்கும் அடிமைப்படுதல், சிசுக்கொலைகள், தற்கொலைகள், போன்ற வாழ்வுக்கு எதிரான தீயவன்முறைகளும் வளர்ந்து வருவதைக் காண முடிகின்றது.



இந்த வடக்கின் வசந்தத்தினால் ஒருசில வழிகளில் மக்கள் நன்மையை அனுபவித்தாலும் பலவழிகளில் தீமையையே சந்திக்கின்றனர். அதாவது சிறியோர் முதல் பெரியோர் வரை தொலைத்தொடர்பு சாதனங்களுக்கு அடிமையாவதனால் தீய பழக்க வழக்கங்களை கைக்கொள்ளுகின்றனர். அத்தோடு பெற்றோர் மட்டில் மதிப்பின்றி, அன்பின்றி செயல்படும் நிலைகள். குடும்பங்களில் நேர்த்தியான உறவின்மை, பிள்ளைகள் சுயமாக அறிவை விருத்தி செய்யாமை, அன்பை, மகிழ்வை, குடும்பத்தில் பகிரமுடியாத நிலைகள் இவை ஒரு புறம்.

ஆயுதப் போர் முடிவடைந்தும் 5-6 வருடங்கள் கழிந்தும்கூட இன்னும் தடுப்பு முகாம்களில் இருப்போர் அதேநிலையில், காணாமல்போனோர் கண்டு பிடிக்காத நிலை, சொந்த இடங்களுக்கு இன்றுமே திரும்பி செல்லாத நிலை. இவற்றிற்கெல்லாம் அபிவிருத்தி வேலைகளும், வீதி சீரமைப்புக்களும் என்றெல்லாம் பல வர்ணங்களாக காட்சியளிக்கும் வடக்கின் வசந்தத்தால் விடிவு வரப்போகின்றதா?

இயற்கை செயற்கை அழிவுகளால் பிளவுபட்டிருக்கும் மனித மனங்களுக்கு ஒரு தெரிவை, அல்லது நிம்மதியைக் கொடுக்கப்போகின்றதா? இல்லவேயில்லை. ஒருசில சொற்ப வருடங்களுக்கு மனித மனங்கள் ஏதோ ஒரு விதத்தில் மகிழ்வை, சுகபோகத்தை நன்மைகளை எட்டிப்பிடிக்க வைத்தாலும்கூட பல்வேறு நிலைகளில் கலங்கி சிதைந்துபோன மனித மனங்களை மேம்படுத்தவோ அன்றேல் தொலைந்து போன, காணாமல் போனவர்களை கண்ணீர் மல்க தேடி அலையும் உள்ளங்களுக்கு ஆறுதல் கொடுக்கப் போவதோ இல்லை. இவற்றிற்கெல்லாம் ஒரு தீர்வை, விடுதலையை, மீட்பைக் கொடுக்க இந்த வடக்கின் வசந்தத்தால் முடியவே முடியாது (உரோ:5:9)

மாறாக மாபெரும் புனிதனான இறைமகன் யேசுவால் மட்டுமே மனிதகுலத்திற்கு ஒரு உண்மையான சுதந்திரத்தை, நிலையான மீட்பை, விடுதலையைக் கொடுக்க முடியும் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணருவோம், விசுவசிப்போம், நம்புவோம்.

எனவே இந்த உண்மையான விடுதலையை மீட்பை மனிதகுலமாகிய நாம் அனுபவிக்க, விடுதலைக் காற்றை சுவாசிக்க வரவிருக்கும் இறைமகனான மனுமகனின்பிறப்பினை ஆவலோடு எதிர்பார்த்து எம்மை தயாா்ப்படுத்துவோம். விழிப்பாயிருப்போம். காத்திருப்போம்.

நிச்சயம் அவரின் வருகையானது எம் அனைத்து இக்கட்டுகளையும் நீக்கி மனித மனங்கள் ஆறுதல் பெற அமை தியை சுவாசிக்க, குழப்பங்கள் விலகவும், நோய்பிணி தீரவும் அன்பு, விசுவாசம் மகிழ்ச்சி மனஅமைதி ஒவ்வொருவரிலும், குடும்பங்களிலும், சமுதாயத்திலும், நாட்டிலும் நாட்டுத் தலைவர்களிலும் நிலவிட அருள்தர செபிப்போம். மனித குலம் மீட்புபெற அந்த புனிதன் இயேசுவின் மானிடப் பிறப்பு எம்மிடையே மலர வரவேற்போம்

**பெறுவோம் அவர் அருளை**
**சுவைப்போம் அவர் அமைதியை**
**அனுபவிப்போம் அவர் மீட்பை**
**எம் வாழ்நாளெல்லாம்.**

- அருட்சகோதரி. மில்ரெட் (தி.கு)



# சிங்களக்கட்சிகளின் தனித்துவமும் இனவாதத்தின் இடமாற்றமும்

அரசியல் கட்சிகள் இல்லாமல் போய் அதற்குப் பதிலாக பௌத்த தேசியவாத இயக்கம் ஒன்று உருவாகும் நிலை புத்தாண்டில் எற்படலாம்.

தற்போது அரசியல் கட்சிகளின் தனித்துவம் தொடர்பான கேள்விகள் எழுகின்றன. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் கட்சிகளின் தனித்துவம் பற்றிய சந்தேகங்கள் அரசியல் விமர்சகர்களிடையே அதிகரித்துள்ளன. அரசாங்கத்திலிருந்து விலகி அமைச்சர் மைத்திபால சிறிசேன உட்பட பலர் பொது எதிரணியில் இணைந்து கொண்ட பின்னர் மேலும் பலர் அரசாங்கத்தில் இருந்து விலகிச்செல்லும் வாய்புள்ளதாக கூறப்படுகின்றது.

### அடையாளம் என்ன?

பொதுவேட்பாளர் மைத்திபால சிறிசேன அன்னம் சின்னத்தில் போட்டியிட உள்ளார். அதற்குப் பொது எதிரணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஆதரவு கொடுத்துள்ளன. பொதுஎதிரணியில் இணைந்துள்ள கட்சிகளுக்கு இடையே அரசியல்ரீதியான கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் பொதுஎதிரணியாக செயற்பட்டுவருகின்றனர். ஆனால் பொதுஎதிரணி என்ற வரையறைக்குள் நின்று கொண்டு எவ்வாறு தங்களுடைய கட்சியின் தனித்துவத்தை தொடரப் போகின்றனர் என்பதும் பொது வேட்பாளர் வெற்றி பெற்றால் பொது எதிரணியின் அரசியல் சார்ந்த செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பது குறித்தும் சரியான தீர்மானங்கள் இல்லை.

ஐக்கிய தேசிய கட்சிதான் பொது எதிரணிக்குள் பெரிய கட்சியாக உள்ளது. அரசாங்கத்தில் இருந்து விலகிச் சென்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்கள் சிறிய குழுவாகவும் மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் மற்றுமொரு குழுவாகவும் செயற்படுகின்றன. ஜே.வி.பி மைத்திரிபால சிறிசேனாவை ஆதரித்தாலும் பொதுஎதிரணியுடன் தொடர்ச்சியாக செயற்படுவது குறித்து இதுவரை நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. ஏனெனில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் முக்கிய பங்காளிகளாக பொதுஎதிரணியில் செயற்படுவதால் முதலாளித்துவ மற்றும் மேற்கத்தையநாடுகளின் சிந்தனைக்குள் அவர்கள் சென்றுவிடுவார்கள் எனவும் அது இலங்கை அரசின் இறைமைக்கு ஆபத்தானது என்றும் ஜே.வி.பி கருத இடமுண்டு.

### மஹிந்தவுக்கான ஆதரவு

பௌத்த சிங்களத் தேசிய வாதம் என்ற கருத்தின் அடிப்படையில் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு கொடுத்திருந்தன.

**- அ.நிக்ஸன் -**

இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் தலையீடுகள் நீக்கப்படவேண்டும் என்பதும் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்ற இனவாத சிந்தனையுடனும் அவர்கள் அன்று செயற்பட்டனர். ஆனால் இன்று சிங்கள பௌத்த தேசியவாத அளவுகோலை உயர்த்துவதிலும் யுத்த வெற்றியை கொண்டாடுவதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனியுரிமை பெற்று விட்டார் என்ற ஆதங்கத்தில்தான் அவர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகினர்.

ஜே.வி.பி மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு ஆரம்பத்தில் ஆரதவு கொடுத்திருத்தாலும்குறிப்பிட்ட கால இடைவெளிக்குள்ளேயே அரசாங்கத்தின் போக்கை விமர்சிக்கத் தொடங்கி எதிர்க்கட்சியாக மாறிவிட்டது. ஆனால் ஜாதிக ஹெல உறுமய கடந்த மாதம்தான் அரசாங்கத்தில் இருந்து விலகியது. இடது சாரிக் கொள்கையுடன் முற்போக்கு வாதம் பேசிய அமைச்சர் ராஜித சேனரட்ன போன்ற அமைச்சர்களும் கடந்த மாதம்தான் வெளியேறினர். ஆனால் இவர்களின் அரசியல் கருத்தில் மாற்றங்கள் எற்பட்டதாகத் தெரியவில்லை. மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் அடக்குமுறை அராஜகம் என இவர்கள் விமர்சிப்பது பௌத்த சிங்கள தேசிய வாத்தை கொண்டு செல்வதற்கு ஜனாதிபதியும் அவரது உறவினர்களும் தடையாக இருக்கின்றனர் அல்லது அதற்கான தனியுரிமையை அவர்கள் கையாளுகின்றனர் என்பதுதான்.

### ஏனைய சமூகங்களுக்காக அல்ல

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அராஜகம், அடக்குமுறை என்பதும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என அவர்கள் கூறுவதும் நீண்டகாலமாக தீர்க்கப் படாமல் உள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்க வேண்டும் என்ற நோக்கில் அல்ல. மாறாக தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கையாளுகின்ற சிங்கள இனவாதத்தைக் கைமாற்றி எடுப்பதே பிரதான நோக்கம். இந்த இடத்திலேதான் அவர்கள் தங்கள் கட்சிகளுக்குரிய தனித்துவத்தைக்கூட சிந்திக்காது பொதுஎதிரணியில் இணைந்து கொண்டனர் என்ற முடிவுக்கு வரலாம். பொதுஎதிரணிக்குள் இருக்கக் கூடிய இடதுசாரிக் கட்சிகளைத் தவிர ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் ஜாதிக ஹெல உறுமயவும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னரும்கூட தொடர்ந்து செயற்படக்கூடிய நிலைமைகள் உண்டு.

ஏனெனில் சிங்கள பௌத்த தேசியவாதமே தற்போது வெற்றிக்கான அரசியல் மூலதனமாக இருப்பதால் விரும்பியோ விரும்பாமலோ கட்சிகளின் தனித்துவம் என்பதை விட முதலில் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் வேறு அரசியல் நகர்வுகள் பற்றி

(தொடர்ச்சி 11ம் பக்கம்) >>




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண வாழ்வே அடித்தளம்



அண்மையில் ஒரு சிலரிடம் இன்றைய எமது சமூகநிலை பற்றி உரையாடிக் கொண்டிருந்த போது ஒருவர் கூறினார். "போருக்கு பின்னான தமிழ்ச் சமூகத்தின் அவலம் என்னவென்று சொன்னால் அது தன் எல்லாப் பரிமாணங்களிலும் அழிந்து வருகிறது" இக்கூற்றின் உண்மைத் தன்மையையும் பாரதூரத் தன்மையையும் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். எமது அரசியல், பொருளாதார, சமய, சமூக, பண்பாட்டு வாழ்வு அதன் அனைத்துப் பரிமாணங்களிலும் அவலத்துக்குள்ளாக்கி வருகிறது என்று சொன்னால் அதற்கு காரணம் என்ன? அத்தகைய அவல நிலையிருந்து அதனைப் பாதுகாக்க நாம் என்ன செய்யலாம்? இவ்வினாக்கள் இன்று மிகவும் பொருத்தப்பாடான வினாக்காளாகவே எனக்குப் படுகின்றன.

**தன்மைய வாழ்வு:**

நான், எனது நலம், எனது புகழ், எனது பெயர், எனது கல்வி, எனது பதவி, எனது குடும்பம், எனது இனம் என்ற விதமாக மிகவும் உட்சுருங்கிச் செல்லும் உணர்வுப் போக்குக் கொண்டதாக எமது வாழ்வு கோளமயமாகி வரும் உலகின் அச்சாணியாக இருந்து வரும் நுகர்வுக் கலாச்சாரம் மனிதனை இந்த நிலைக்கு தகர்த்து செல்கிறது. புலன்களைத் திருப்திப்படுத்த நான் நுகர வேண்டும். தொடர்ந்து நுகர்ந்து கொண்டே இருக்க வேண்டும். ஆகவே எனது நுகரும் ஆற்றலை அதிகரித்துக் கொள்ள எதையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற மனநிலை இன்றைய சமூகத்தின் நோய்க்குறியாகும். ஜனாதிபதித் தேர்தல் அண்மித்து வரும் நாட்களில் நாங்கள் வாக்களித்து நம்மை ஆள்வதற்கென அனுப்பும் தலைவர்கள் எவ்வாறு பணத்தின் பின் அலைபவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பத்திரிகையில் படிக்கும் போது சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. பணத்தின் பின்னாக அலையும் நாய்களாக அவர்களது வாழ்வு நகர்கிறது. அதிகாரிகள், சமயத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள் அனைவரும் இப்போக்கிற்கு அடிமைகளாக உள்ளார்கள். விகிதாசாரம் வேறுபடலாம் ஆனால் போக்கு ஒன்றுதான்.

**தன்னையே வெறுத்து...**

தன்னலமான இன்றை வாழ்வுப் போக்குக்கு மாற்றாகவும் மருந்தாகவும் கிறிஸ்தவம் வைக்கும் வாழ்க்கை முறைதான் தன்னை மறுத்து, தன்னையே கொடுத்து வாழும் அர்ப்பண வாழ்க்கைமுறை. தன்னைமையப்படுத்தி வாழும் உலகில் எனக்காக அல்ல என்றும் உனக்காக என்று வாழ முன்வரும் அர்ப்பண வாழ்வானது புதியதொரு பிறரன்புக் கலாச்சாரத்தின் வித்தாகக் காணப்படுகின்றது.

கன்னியான நீ கருவுற்று ஒரு மகனைப் பெறுவாய் என்ற செய்தியைக் கேட்டு கலங்கி நின்ற அன்னை மரியா" இதோ உமது அடிமை உமது வார்த்தையின் படியே ஆகட்டும்" என்று சொல்லி தன்னை அர்ப்பணித்த போது தன்வயமாக உலக கலாசாரத்தின் முன் உயர்ந்து எழுந்து நிற்கிறார். எம் அனைவருக்கும் மாதிரியாகவும் உயர்கிறான். "உமக்குச் சித்தமானால் இத்துன்பக்கலம் என்னை விட்டு அகலட்டும் ஆயினும் எனது விருப்பமல்ல உமது விருப்பமே நிகழட்டும்" என்று சிலுவையில் இயேசு தன்னை கொடுக்க முன் வந்தது இத்தகைய அர்ப்பண வாழ்வின் உச்சம், கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் பயனளிக்கும் என்ற தனது போதனைக்கு சாதனை வடிவம் கொடுத்த இயேசு அர்ப்பண வாழ்வின் உச்ச வெளிப்பாடு என்பதும் தன்மையமான இவ்வுலகப் போக்குக்கு நிச்சயமான எதிர் சான்று என்பதும் நாம் மனங் கொள்ள வேண்டியது. யேசுவைப் பின்பற்றி வாழ முன் வந்த எத்தனையோ மனிதர்கள் இத்தயை மாற்றுக்கலாசாரத்தின் சான்றுகளாக தமது வாழ்வைப் பதிவு செய்து உள்ளனர். இத்தயை வாழ்வின் எமக்கான ஆகப் பிந்திய உதாரணமாக யோசவ் வாஸ் அடிகளாரின் புனிதர் நிலையைக் கூற முடியும். ஆயினும் பெயர் குறிப்பிடப்படாத பல சாமானியர்கள் பலர் இத்தகைய மற்றவருக்காக வாழும் வாழ்வின் மாதிரிகளாக எம்மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

**அர்ப்பனவாழ்வுக்கான ஆண்டு:**

மேற்சொன்ன பின்னணியில் தான் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அர்ப்பண வாழ்வுக்கான ஆண்டுப் பிரகடனம் முக்கியத்துவம். பெறுகிறது. உலகை விழித்தெழச் செய்யுங்கள் என்ற கோரிக்கையோடு திருத்தந்தையவர்கள் பிரகடனப் பற்றியிருக்கும் துறவற வாழ்வுக்கான அல்லது அர்ப்பண வாழ்வுக்கான இந்த ஆண்டு வெறுமனே துறவிகளின் வாழ்வு பற்றியும், அழைத்தல் பற்றியும் மட்டும் சிந்திக்க எம்மை அழைக்கவில்லை மாறாக இன்றைய உலகின் தன்மைய வாழ்வுப் போக்கிற்கு எதிரான ஒரு பிறரன்புக் கலசாரத்தின் மாதிரி வாழ்க்கை முறை ஒன்றேயே முன் வைக்கிறது. துறவற வாழ்வு என்பது அடிப்படையில் இறையாட்சிக்காகத் தன்னையே கையளிப்பதாகும். அதனால்தான் இக்காலத்தில் துறவற வாழ்வின் முன்மாதிரிகை மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. அல்லது முன்மாதிரிகையான துறவற வாழ்வு வேண்டப்படுகிறது.

மற்றவருக்காக தன்னை கையளிக்கும் அர்ப்பண வாழ்வின் உயர் பள்ளி ஒவ்வொரு குடும்பமாகும். அங்குதான் ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வு எவ்வாறு அமையப் போகின்றது என்பதை வடிவமைத்துக் கொள்கிறான். தன்மையமான வாழ்வை வாழும் பெற்றோர்கள் உள்ள குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைகளும் பெரும்பாலும் தன்மைய வாழ்வுக்கே பழக்கப்பட்டு விடுகின்றனர். மற்றவர்களுக்காக சின்னச்சின்னத் தியாகங்களைச் செய்யும் குடும்பங்களில் பிறப்பவர்கள் தாமும் மற்ற வருக்காக அதிகமாகத் தியாகம் செய்யக் கற்றுக் கொள்கின்றனர். எனவே தான் அர்ப்பண வாழ்வை வெறுமனே துறவற வாழ்வுக்குள் முடக்கி விடுவது தவறானதாகிறது. குடும்பத்தில் தந்தை, தாய், பிள்ளைகளிடத்தில் பரஸ்பரம் வெளிப்படாத பிறரன்கு, தியாகம் போன்ற பண்புகள் துறவற வாழ்விலும் வெளிப்பட முடியாது.

"இன்பத்திலும் துன்பத்திலும் உடல் நலத்திலும் நோயிலும் நான் உமக்குப் பிரமாணிக்கமாய் இருந்து என் வாழ்நாள் முழுவதும் உம்மை நேசிக்கவும் மதிக்கவும் வாக்களிக்கின்றேன்" என்ற இல்லற அர்ப்பணம்தான் அனைத்து அர்ப்பணங்களுக்கும் மூலைக் கல்லாய் அமைகிறது. இல்லற அர்ப்பணம் இனிதே வாழப்படுகின்ற போது குருத்துவ துறவற அர்ப்பணங்களும் சிறப்புறும்.

ஆயினும் இன்றைய நுகர்வுக் கலாசாரத்தின் சவால்களும் தன்மைய உலக வாழ்வில் சவால்களும் குடும்பங்களைப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளன. எனவே இல்லறம் நோக்கிய ஒரு தூதுப்பணி இன்றைய அவசியத் தேவையாக உள்ளது. திருக்குடும்பத்தின் வாழ்வை முன்னுதாரணமாகக் கொண்டு பிறரன்புள்ள குடும்பங்களை உருவாக்க முன்வருவோம்.

– அருட்பணி. M.V.E.இரவிச்சந்திரன் –

## அன்பு + பகிர்வு = கிறிஸ்மஸ்

கடவுள் என்பவரில் எல்லா நேர்மையான குணாதிசயங்களும், இயல்புகளும் நிறைந்திருக்க வேண்டும். எதிர்மறையான எதுவுமே அவரில் இருக்க வாய்ப்பில்லை. இருக்கவும் முடியாது. இப்படியானால் எல்லாவற்றிலும் சிறந்த, உன்னதமான அம்சம் அன்புதான். அதைத்தவிர வேறொன்று இருக்க முடியாது. இந்த அன்பும் கடவுளில் முழுமையாகவே இருக்கிறது. இருக்க வேண்டும். எனவேதான் 'அன்பே கடவுள்' என்கிறார் புனித யோவான்.

அன்பையும், பகிர்வையும் பிரிக்க முடியாது. ஒன்றில்லாமல் மற்றொன்றிருக்க முடியாது. உண்மையான அன்பு தன்னிலேயே ஒருபோதும் நிறைவைக் காண விரும்பாது. இயலாததும்கூட அது தன்னைக் கடந்து பிறரில்தான் நிறைவை முழுமையாகக் காண முடியும். கடவுள் தம் அன்பினால் இந்த உலகை, மனிதனை படைத்தவுடன், படைப்புக்களுடன் உரையாட, உறவாட நம்மைத் தேடி வருகின்றார். படைப்பின் சிகரமாக படைக்கப்பட்ட மனிதனிடம் முழுநிறைவு (இறைவனின் சாயல்) ஏற்படும் வரை அன்பு ஓய்வெடுக்காது. "நம்மீது அன்பு கொண்ட அவர் (கடவுள்) கடைசிவரை அன்பு கூறலானார்" என்கிறார் புனித யோவான்.

தத்துவயியல் "இறைவன் மனிதனாவது சாத்தியமில்லை, அப்படி நடந்தால் அவர் இறைவனாக இருக்க முடியாது" என்கிறது. அன்பே உருவான கடவுள் மனிதனைத் தேடி, மனித உருவில் வருவதே சிறந்த வழி என்று கண்டார். மனிதனை முழுமையாகப் புரிந்து அன்பு செய்ய மனுவுரு எடுப்பதைவிட வேறு வழியில்லை என்று கடவுள் கண்டார். குழந்தைகளுடன் உரையாடுகையில் குழந்தையின் மொழியில் பேசுவதுபோல கடவுளும் மனித உருவில் வருவதன் வழியாகவே மனித உணர்வுகள், சிந்தனைகளைப் புரிந்து கொண்டு இறை - மனித உறவு முழுமை பெறச் செய்ய முடியும் என்பதை கடவுள் உணர்ந்திருந்தார்.

மனிதனைத் தேடி வந்து பிறந்த இயேசுவின் இறை மனித பிறப்பானது கூறும் செய்தி என்ன? பணக்காரர்கள் பகிர்வு மனப்பான்மையற்று இருப்பதும், கொஞ்சமாகக் கொண்டுள்ளவர்கள் மட்டுமே பகிர முன்வருவதும் அன்றாடம் நாம் காணும் உண்மையாகும். அன்பின் மிகுதியால் மனுவுரு எடுத்த இயேசுவிடம் தமக்கென வைத்துக் கொள்ளும் சுயநல உணர்வு கொஞ்சமும் இல்லை. எனவேதான் நிறைவாகக் கொடுக்க முடிந்தது. தமது விண்ணக மகிமையைத் துறக்கவும், மனித நிலையில் பிறக்கவும், தம்மையே தாழ்த்தியதில் இயேசுவின் அன்பின் உச்சம் வெளிப்பட்டது. தம்மையே வெறுமையாக்கிய இறைவனின் பிறப்பில் தான் வெறுமையான மனிதர்களாக நம்மை நிறைவுள் ளவர்களாக மாற்ற முடிந்தது.

– இராஜசேகரன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கிறிஸ்மஸ் சிறப்புச் சிந்தனைக் கவிதை)

# இதற்குத்தானே ஆசைப்பட்டாய் தேவகுமாரா...?



தேசங்கள் எல்லாம்
ஆவலோடு எதிர்பார்க்கும்
தேவகுமாரனே!
நீ எங்கே பிறக்கப் போகிறாய்.....?

இயேசுவே....!
இது – யூதர்களின் காலம் அல்ல
யூதாஸ்களின் காலம்!

உமது பிறப்பிடம் -
இலங்கை என்றால்
தயவுசெய்து வடக்குக் கிழக்கு
வேண்டாம்
உமது பிறப்புக்கு
உத்தரவாதம் கிடையாது....!

நற்செய்தி கேட்ட இடையர்களோ -
அரசாங்கத்தின்
'விலையில்லா' ஆடுகளை
எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்....!

நம்பிக்கையோடு -
பிறக்க வாரும் இயேசுவே...!
'நல்ல கள்வர்' எவரேனும்
உமக்கு இடம் தரலாம்...!

தயவு செய்து –
தனியார் மருத்துவமனை வேண்டாம்
'சிசேரியன்' என்று கூறி
கன்னிமரியின் வயிற்றில்
கத்தி வைத்து விடுவார்கள்...!

'பிரசவத்திற்கு ஆட்டோ இலவசம்' -
நம்பி ஏற வேண்டாம்
ஆட்டோவில் ஏறினால்
பிரசவம் இலவசம்....!

இயேசுவே...!
இலங்கையில் 'மலைப் பிரசங்கம்'
வேண்டாம்....

குன்று இருக்கும் இடமெல்லாம்
புத்த பிரானும் இருக்கிறான்...
மதம் மாற்றுவதாய் வழக்கு வரும்...!

திருமண வீட்டில் -
தண்ணீரை இரசமாக்குகிறீரா...?
'மதுபானக்கடை' வருமானம்
குறைந்ததாக
சட்டம் பாயும்...!

மூன்று வேளையும் -
'விலையில்லா' அப்பமும். மீனும்
தருவீர் என்றால்
எங்கள் ஓட்டு உமக்குத்தான்...!

நிலைமை தெரியாமல் -
உமது சீடர்கள் மீன்பிடிக்க
கடலுக்குச் செல்ல வேண்டாம்..
அவர்கள் உயிருக்குப் பாதுகாப்பில்லை.!

இருப்பினும் -
பாவிகளை மீட்க வாரும்...!

இங்கே – கண்ணாடித் தொட்டியில்
மீன் வளர்ப்பார்கள்...
கட்டிப் போட்டு – காவலுக்கு
நாய் வளர்ப்பார்கள்....
பிள்ளைகளைப் பெற்றவர்களோ -
முதியோர் இல்லத்தில்
கண்ணீர் வடிப்பார்கள்.....!

வரதட்சணைக்கு
வழி தெரியாமல்
கன்னி'யாகவே
காலமெல்லாம் வாழும் 'மரியா'க்களை
காண வாரும் இயேசுவே....!

'கேளுங்கள் தரப்படும்"-
அலைபேசி ரிங் டோனாக
ஒலிக்கிறது லொட்சுக்களில்...!

'தட்டுங்கள் திறக்கப்படும்' என்றவரே -
மாலைப் பொழுது
'ஜெபமாலைப் பொழுது' என்று -
எவர் வீட்டுக் கதவையும்
தட்டி விடாதீர்....
சீரியல் பார்க்கும் நேரம் அது ....
சிலுவையில் அறைந்து விடுவார்கள்....!

திருமண வாழ்வில் -
கடவுள் இணைத்ததை ;
மனிதர் பிரிக்கக் காத்திருக்கும்
நீதிமன்றங்களை
எமது தேசத்தில் வந்து பாரும்....!

உறவுகளினவிரிசலையும்
உள்ளங்களின் நெரிசலையும்
சந்திக்கும் இல்லங்களில் -
சமாதானப் பூக்கள் மலர
சந்தோச வண்டுகள் அமர
தெய்வீகத் தென்றலாக வாரும்...!

சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் -
விடுதலை வானம் தேடி
கனாக் காணும்
சிறகொடிந்த பறவைகளுக்கு
வெளிச்ச விடியலாக வாரும்..!

"பாரு'க்குப் பின்னாலும்
'ஸ்டாரு'க்குப் பின்னாலும்
பாதை மாறிப் பயணம் செல்லும்
இளம் ஆடுகளை மீட்க
நல்ல மேய்ப்பனே..... வாரும்....!

கள்ளமில்லா குழந்தைகளை
மெல்ல மெல்ல வளைக்கும் -
ஊடக 'ஆக்டோபஸின்'
கரங்களிலிருந்து மீட்க
உடனே'இயேசுவே... வருக...!

பாவக் குப்பைகளிலிருந்து மீட்டு -
இலங்கைத் தீவைத் தூய்மையாக்க
பாலகனே... வருக...!

**– ஆனையூரான்**
(நன்றி : நானிலம் இணையம்)

## அமைதியின் தேவபாலகன்

தரணியெங்கும் அமைதிபெற
தனி மனிதனாக நின்று
உரம் கொடுத்தாய் இப்பூமியில்
இனித் துன்பம் இல்லையென
இம்மையில் உதித்த பாலகனே

வானதூதர் சொல்கேட்டஅன்னைக்கு
இரக்கம் காட்டயாரும் இல்லை
உம் அரண்மனை மாட்டுக் கொட்டில்
இடையர் நடுவினில்
அமைதியாய் உதித்தீர்

ஒளியுடன் பிறந்த பாலகனை
வாள் கொண்டு தேடினான் ஏரோது
அமைதியான தேவபாலகன்
அன்னையின் மடியில்
அமைதியானஉறக்கத்தில்

மூன்று ஞானிகளின் வருகை
மூன்று பரிசுப் பொருட்களுடன்
மூவுலகைத் தாங்க வந்த பாலகன்
கண் மூடிய உறக்கத்தில்

அடிக்கின்ற காற்றுக்கூட அமைதியற்று
துடிக்கின்றது எம் மனம்
காய்கின்றது கண்ணீர்
மனங்கள் இல்லாத மனிதர் கூட்டத்தில்
மறுபடியும் பிறப்பீரோ
அமைதியின் வடிவமாய்?

யூ. மரியயோசேப்பின்,
மாதகல், தோமையார் ஆலயம்.

## பாலகனே பாரினில் நீ வர வேண்டும்

அவலங்கள் தீரவில்லை
ஆரவாரம் ஓயவில்லை
அன்பிழந்த எம் நெஞ்சம்
ஆறுதல் பெற - நீ
அன்னை மடியினில்
அமலனாய் தவழ்ந்துவா!

காலுமில்லை கையுமில்லை
கண்பார்வை தெரியவில்லை
கண்ணீர் விடும் நெஞ்சங்களை
கணப்பொழுதில் காத்திட - நீ
கனிந்த உள்ளம் கொண்டு
தாய்மடியில் தவழ்ந்துவா!

பெற்றதாயைக் காணவில்லை
பேர் சொல்லத் தந்தையில்லை
அநாதைச் செல்வங்களின்
அவலநிலை போக்கிட - நீ
அமைதியின் பாதையில்
அன்னைமடி உதித்துவா

காலங்கள் மாறினாலும்
சோகங்கள் மாறவில்லை
காரணமும் தெரியவில்லை காத்தனே
எம் குறைதீர்க்க - நீ
கன்னிமரி மடிதனிலே கண்வளர ஓடிவா

இளைஞரின் வாழ்க்கையெல்லாம்
இன்னலுற்றுப் போனதையா
இளமையை ரசிக்காமல் இடர்முகாமில்
வாழ்க்கையா - நீ இளமையைக்
காத்திட இனிதாகப் பிறந்துவா

பாலகனே! பாலகனே!
பரமபிதா திருச்சுதனே!
பாவிகளெம் வாழ்க்கையினை
பரிசுத்தமாக்கிட - நீ
பரலோகம் தாண்டி எம் உள்ளத்தில்
உதிக்கவா...!

**செ.அன்ரோவினோஜன், புனித வளனார் அ.ம.தி, சிறியகுருமடம்.**

## ஒளியான பாலா

பனிதூவும் பொழுது
என் கரம் சேர வா
பனிப்பூவின் மணமாய்
என் அகம் சேரவா
இருளான இடமெல்லாம்
ஒளியாக வா
என் உயிராக வா
தேன்சிந்தும் தமிழாலே
நான் வாழ்த்தொனறு பாட வா
தெவிட்டாத அமுதாக
குறைதீர்க்கும் மருந்தாக
கருவாகி உருவாகி
எம் வாழ்வின் ஒளியாகி
இருள் போக்க வா
அருள் பொழிய வா

– யே.இக்னேசியஸ்

## வார்த்தையை நாம் போற்றிடுவோம்

அன்புநிறை மனித வார்த்தை
ஆதியிலே இருந்த வார்த்தை
கடவுளோடு இருந்த வார்த்தை
கடவுளாயும் இருந்த வார்த்தை

இருளைப் போக்கும் ஒளியின் வார்த்தை
இகபர நன்மை அளிக்கும் வார்த்தை
பாவம் போக்கும் பரமன் வார்த்தை
பாரில் ஒளியை ஏற்றும் வார்த்தை

அடிமை விலங்கை ஒடிக்கும் வார்த்தை
ஆணவத்தைப் போக்கும் வார்த்தை
வாழ்வும் வழியுமான வார்த்தை
வழிதவறும் ஆட்டை மீட்கும் வார்த்தை

மனிதனாகி வந்த வார்த்தை
நம்மிடை குடிகொண்ட வார்த்தை
வார்த்தையை நாம் போற்றிடுவோம்
வாழ்வை நாமும் பெற்றிடுவோம்.

ம.டினோஜா, மல்வம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழையில் இறைவனைக் காண்போம்

பகட்டாய் வாழாதே! பக்தியோடுவாழ்!
பரமன் இயேசுவைக் கண்முன் காண்பாய்!
இறைவனின் இல்லம் கோவிலில் மட்டுமல்ல!
ஒவ்வொரு மனித உள்ளமும் தான்!
இறைவனை இறை இல்லத்தில் தேடாதே!
உறைவிடமற்ற உறவுகளில் தேடு!
வாடாத மலர்கள் இறைவனுக்கு வேண்டாம்!
வாடிய உள்ளங்களுக்கு உரமூட்டு!
எளியவரை ஏளனம் செய்யாதே!
எளிமையே இறைவனின் விருப்பம்
ஆலயதிருவிழாக்களில் வேண்டாம் ஆடம்பரம்
தெருக்கோடியில் உள்ள எளியவரைத் தூக்கிவிடு
மடி நிறையப் பொருளிருந்தும்
மனமில்லைப் பகிர்ந்தளிக்க!
அள்ளிக் கொடுக்கத் தேவையில்லை
உள்ளதைக் கிள்ளிக் கொடு! - அவர்களில்
உன்னதரைக் காண்பாய்
உருவங்களில் இறைவனை உணரமாட்டாய்
உடைந்த உள்ளங்களில் உணர்வாய்
பலி செலுத்துவதில் பயனில்லை!
பகிர்ந்து வாழப் பழகிக் கொள்!
ஏட்டிலே தேடி இறைவனை சுவைக்க மாட்டாய்!
ஏழைகளிலே தேடு இறைவனைக் காண்பாய்!



அ.அனோஜா, புனிதஆசீர்வாதப்பர் ஆலயம், நல்லூர்

## வருவாயா? எப்பொழுது வருவாய்?

ஈசனே! நீர் வருவது எப்பொழுது?
எப்படி வருவாய்? எப்போது வருவாய்?
கன்னியின் கருவிலா? மலடியின் மடியிலா?
கணினி மயமாய் கணநேரத்தில் மாறி வருவதைச்
சொல்கிறேன் கேட்பாயா?
கணினி மூலம் கருத்தரித்து
சோதனைக்குழாயின் குழந்தையாய்
மின்னஞ்சல் மூலம் வரவுச் செய்தியாய்!
ஆன்ட்ராய்டு அலைபேசி மூலமாய்!
சினிமா நட்சத்திரமாய்! செல்போன் விளம்பர மோகமாய்!
அரைகுறை ஆங்கிலத்துடன்
அலங்காரமாய் திரையில் வருவாயா?
தினம் வணங்கும் ரசிகனாய் கோவில் கட்டி!
இலவசங்களை அள்ளி வழங்கும் அரசியல் வாதியாய்!
கடமைதனை கால் செருப்பாய் கழற்றி விட
இப்படி வந்தால் உன்னை வரவேற்போம் வருவாயா?
குழந்தையாய் வராமல்! குணமெனும் சான்றோராய் வராமல்!
சாதி மத பேதம் விரட்ட சாட்டையுடன் வருவாயா?
கயமையை விரட்ட தடியுடன் வருவாயா?
அட்டூழிய அரசியலை அழிக்க அரிவாளுடன் வருவாயா?
அழுகின்ற பாலகுமாரனாய் அல்லாமல்
அநியாயம் எதிர்க்கும் ஆக்ரோசக்காரனாய்
வருவாயா? எப்பொழுது வருவாய்??

– ம.மெரினா

## இறைமகன் யேசுவே வருக



அள்ளி எடுத்த நினைவுகளை
தெள்ளி எடுத்துநல் தேனமுதாய்
குழைத்து எடுத்து கவி
வடிப்போம் - எம்மை
மீட்டு எடுத்த இயேசுபாலனுக்கு

மார்கழியில் உதித்திட்ட
மாபரன் இயேசுவே வருக
மாந்தர் எம்மவர் மனங்களில்
மகிழ்ச்சியைத் தருக

மனுக்குலம்
மீட்கவேஎம்மிடையே
மனிதனாய் பிறந்தீர்
மறைவழி நின்றே எம்மை
இறைவழி சேர்த்தீர்

ஏழைகளின் கோலம் பூண்டே
எம்மிடையே அவதரித்தீர்
எல்லோரும் வியக்கும்
வண்ணம் - எளிமையான
வாழ்வு வாழ்ந்தீர்

உண்மையின் வழியினில்
உலகிற்கு ஒளியானீர்
உத்தமராய் நாம் வாழவே
உம் உயிரை ஈந்தீர்

நத்தார் எமக்குத் தரும்
நற்செய்தியை நாம் ஏற்போம்
நானிலத்தில் எந்நாளும்
நல் கிறிஸ்தவர்களாய்
வாழ்வோம்

இறைமகன் தரும் சமாதானம்
எம் இல்லங்களிலும்
உள்ளங்களிலும்
இனிதாய் மலர்ந்திட
இறைஞ்சிடுவோம் நாம்
இந்நாளில்

ம.நிரைன்ஙைன் - குருஸ்
புனித வளனார் அ.ம.தி
- சிறிய குருமடம்

## கிறிஸ்மஸ் நாள்..

சர்ப்பம் தந்த பாவத்தை
கர்ப்பம் வந்து
தீர்த்த நாள்
மரத்தால் வந்த பாவத்தை
வரத்தால் களைந்த
மந்திர நாள்

வார்த்தை ஒன்று
மனிதனாய் வடிவெடுத்த
நல்ல நாள்

தொழுவம் ஒன்று
தொழுகை பெற்ற
திருநாள்

ஒதுக்கப்பட்டவை
வணக்கம் பெறும் என
வருகையால் சொன்ன நாள்

ஆடிடைக் கூட்டில்
ஆதவன் உதித்த
அதிசய நாள்

- சேவியர்
யாழ்ப்பாணம்

## வாராயோ பாலகனே

விடியலின் ஒளியொன்று
விடுதலை தந்திட
கருவாகி மழலையாய்
மண்ணில் மலர்ந்துள்ளது

உண்மையான வழியில்
உலகினரை உயர்விக்க
உண்மையின் ஒளியாய்
உலகினிலே உதித்து விட்டீர்

உம் வழியில் எம்வாழ்வு
எப்பாழுதும் சிறப்புற
பாலையான எம் மனதை
மகிழ்ச்சியால் குளிர்விக்க
வாராயோ பாலகனே

சேரூபன் ஷெர்வின்
ஞானப்பிரகாசர் வீதி. மல்வம்.

## கிறிஸ்மஸ் இரவு..

அது ஓர் அர்த்த ராத்திரி
ஆனாலும்
அர்த்தமுள்ள ராத்திரி..!
கிறிஸ்து பிறந்த
கிறிஸ்மஸ் ராத்திரி

மனிதா.. மனிதா...
குடில்கள் அலங்காரத்தில்
குழந்தை இயேசுவாய்
குடியிருக்கவா
இயேசு பிறந்தார்..?

மதுவென்னும்
திரவத் தீயை - உன்
குடலுக்குள் குடியேற்றவா
இயேசு பிறந்தார்..?

புகை என்னும்
வெடிமருத்தை - உன்
நுரையீரலுக்குள்
புதைத்து வைக்கவா
இயேசு பிறந்தார்..?

நீ
ஆண்டுக்கொரு முறை
ஆலயம் சென்று வரவா..
ஆண்டவர் பிறந்தார்..?

மனிதா...
மனந்திரும்பு..!
மனசுக்குள் திருந்து..!!!

பொன்னோ பொருளோ
என்னிடம் இல்லை..!
நறுங்குண்டு
நொறுங்குண்டு
இரத்தம் கசியும்
இதயம் ஒன்று இருக்கிறது..!

அதையே உமது...
காயம்பட்ட பாதங்களில்
காணிக்கையாக்குகிறேன்..!
அதுவே எனக்கு -
அர்த்தமுள்ளதோர்...
கிறிஸ்மஸ் ராத்திரியாய்
விடியட்டும்..!

அல்பேட் பெஸ்ரியன்
குருநகர்

## அருளூற்றி! ஒளியேற்றி! ஆன்மாவைப் புதுப்பிக்கும்

அருளூற்றி ஒளியேற்றி ஆன்மாவைப் புதுப்பிக்கும்
திருவுளச் சுடரே! திருப்பாதம் போற்றி
எழில்வனம் பொழியும் ஏந்தலே! வருக!
அழியாப் பேரின்பம் அடையவழி தருக

ஆயுள் ஔடதமே! ஆன்ம திடபலமே!
தோயும் அன்பினால் தொடுவீர் எம்மை
வருந்தும் பாவிக்குத் திருந்தவிழி கூறும்!
விருந்தாக வீற்றிருந்து விடுதலைகள் தாரும்

அற்புத வேந்தே! அதிசயப் பிறப்பே!
நிர்க்கதி வாழ்வில் நிம்மதி வீசும்
அமுதான அருட்பணி அவனியில் பரிமளிக்க
சமுதாயச் சீரழிவு சங்கையுடன் உருமாற்றும்



கதறிப் பதறிச் சிதறும் மைந்தரை
உதறித் தள்ளார் உன்னத கிறிஸ்து!
இனமதப் பிழவுகள் இணைந்து ஒன்றிக்க
குணநலம் ஊற்றுவார் குழந்தையேசு பாலகன்!

ஆக்க முயற்சிகள் அபிவிருத்தி ஓங்கும்
ஊக்க உற்சாகம் உயிராவி! ஊட்டுவார்!
பிறரன்பு தேசபக்தி பெரும்பொறுமை தியாகசிந்தை
பாரெங்கும் இளைஞரணி கருவிகளாய்ச் சேரும்

– ஞா.அரியமலர், மிருசுவில்.

## எமக்காகப் பிறந்தவர் எம்மில் பிறப்பாரா?

வானத்து எல்லையெங்கும் வண்ணப் பூச்சொரியும்
கார் காலத்து ஓர் இரவு களிப்பான மார்கழியில்
ஞாலத்து இருளகற்ற நம் பாவம்தனை மீட்க
காலத்தின் தேவைக்காய் கன்னி மகன் அவதரித்தார்
ஆயுதமே வேதமாக அடக்குமுறை கொள்கையாக
அன்பை வெறுப்பவர்க்கு நற்பண்பைத் தருவாரா?
ஆணவத்தின் பிடியினிலே அல்லலுறும் இப்பூமி
காண்பதற்கு புது உலகக் கதவு திறப்பாரா?
மனிதத்தைத் தொலைத்து விட்ட மகத்தான பூமியிலே
தனிமனித நேயத்தை தரணியெங்கும் விதைப்பாரா?
வன்முறைகள் சூழ்ந்த இந்த வக்கிர பூமியிலே
துன்பநிலை மாற்றி அன்புப் பூப்பூக்க வைப்பாரா?
கண்டதே காட்சி என்ற கசப்பான நிலை மாற்றி
கொண்டதே உயர்வு என்ற குடும்பநிலை அமைப்பாரா?
உதயத்து விடிவெள்ளி உலகுக்கு ஒளியூட்ட
எம் இதயத்தைப் புதுப்பிக்க எம்மில் பிறப்பாரா? – நிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் குடும்பங்கள் திருக்குடும்பங்களாக மாற சில அம்சங்கள்

- இ.விசுவாசம் -

திருக்குடும்ப விழாவில் எம் குடும்பங்களையும் திருக்குடும்பங்களாக வாழவைக்க சில அம்சங்களை இங்கு சிந்திக்க முனைகின்றேன்.

**பாராட்டிப் பேசுங்கள் (Appreciative Conversation) :**

"நான்கு வார்த்தை நல்ல வார்த்தையாகச் சொல்லி பாராட்டிப் பேசுறத விட்டுட்டு எப்பப் பார்த்தாலும் எதிர்மறை வார்த்தைகளில் ஏன் எரிந்து விழுகிறாய்?" என்று முதியவர்கள் பேரப்பிள்ளைகளிடம் அவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றி கூறுவதைக் கேட்டுள்ளோம். பாராட்டிப் பேசுங்கள். பணமா? காசா? வார்த்தைகள்தானே...! வாயாரப் புகழ்ந்து பேசுங்களேன்! சிலர் பாராட்டிப் பேசுவதை கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்திற்கு வருமான வரி கட்டுவதுபோல கஷ்டமாகக் கருதுவது ஏன்?

இறைவனைத் தொழுகையில் கூட மலர் தூவி, மாலை அணிவித்து, 'போற்றி... போற்றி..' என்று புகழ்பா பாடுகின்றோம். இறைவனுக்கே பாராட்டுவது பிடித்திருக்கிறது என்றால் மனிதர்களுக்குப் பிடிக்காதா என்ன? செய்யும் தொழிலில் நண்பர்கள், முகவர்கள், வியாபாரிகளிடம் நயமாகப் பேசுகிறோம், பாராட்டிப் பேசுகின்றோம். ஏன் அவர்கள் குறை கூறினாலும் சந்தோசமாக ஏற்றுக் கொள்கின்றோம். ஏன்? வியாபாரம் நடக்க பணம் சம்பாதிக்க! பார்ப்பவர்களையெல்லாம் புகழ்ந்து பேசும் போது நம் குடும்பத்து உறுப்பினர்களிடம் எரிந்து விழுவதும், சதாகாலமும் ஏசுவதும் ஏன்? பிசினஸை விட குடும்பம் முக்கியம் இல்லையா?

**கோபமும், குடும்பமும்:**

குணம் என்பது ஒரு ஹீரோ என்றால், கோபம் என்பது ஒரு வில்லன். இந்த வில்லனைக் கட்டுப்படுத்தி வைப்பது எவ்வளவு கடினம் என்பது உங்களுக்குத் தெரியும். கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஜாக்கிரதையாக உள்ளவர்களிடம்கூட, அவர்களையும் மீறி வெளிப்பட்டு சிக்கலை ஏற்படுத்தக் கூடியவன் இந்த வில்லன். கோபம் இல்லை என்றால் குடும்பத்தில் பிரச்சனை வர வழியே இல்லை. கோபம்தான் சிக்கல்.

கோபத்தைக் கட்டுப்படுத்துவது என்பது குடும்ப வாழ்வுக்கு மிக முக்கியமானது மட்டுமல்ல, அத்தியாவசியமானதுமாகும். கோபத்தைக் கட்டுப்படுத்துவது என்பது கோபத்தை மனதுக்குள்ளேயே அடக்கி வைத்துக் கொள்வது அல்லது கோபத்தை எப்படித் தவிர்ப்பது? கோபத்தால் வரும் பிரச்சினைகளை முளையிலேயே கிள்ளி எறிவது எப்படி? என்ற தெளிவான அறிவைப் பெற்றிருப்பது மிகமிக அவசியம். , கோபத்தைத் தவிர்ப்பது அல்லது கட்டுப்படுத்துவது என்பது மில்லியன் டாலர் தீர்வாகும்.

"கோபம் என்பது சோகத்தின் உருவகம். சோகம் என்பது கோபத்தின் மென்மையான வெளிப்பாடு. கோபம் என்பது சோகத்தின் தீவிரமான வெளிப்பாடு" என்கிறார் உளவியலார் சிக்மென்ட் ப்ராய்டு. சோகத்தில் நிறைவேறாத கனவுகள் இளமைப் பருவத்திலும், ஏன் நடுவயதுப் பருவத்திலும் கோபமாக வெடிக்கலாம். இப்படிப்பட்டவர்களுக்கு காரணம் இல்லாமல் வயிற்றுப்போக்கு, தலைவலி ஏற்படுவது வழக்கம். மருத்துவர்களின் சோதனைகளில் இவை வெளிப்படுவதில்லை. ஆழ்மனக் காயங்கள், சோகங்கள் கோபமாக மட்டுமல்ல, உடல் உபாதையாகவும் வெளிப்படலாம்.

கோபம் வருகிற போதெல்லாம் கோபப்படும் நபர் 'நமது கோபம் அவசியம் தானா? எதற்காக இந்தக் கோபம்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்ள வேண்டும். காரணமில்லாமல் கோப்படுவதே பெரும்பாலும் நடக்கிறது. கோபத்திற்கான காரணங்களைச் சிந்தித்து, தவறு தன்னிடமிருந்தால் அகற்றி, குடும்ப நபர்களிடமிருந்தால் எடுத்துக் கூறி கோபத்தைத் தவிர்க்க வேண்டும்.

கோபம் வருவது இயற்கை. கோபப்பட வேண்டிய சூழ்நிலையில் சூழ்நிலைக்கேற்ப கோபப்படுகிறோமா என்பது முக்கியம். ஒரு குழந்தை கவனக் குறைவால் கண்ணாடி டம்ளரை உடைத்து விட்டால் அதற்காக என்ன செய்யலாம்? ஜாக்கிரதையாக கண்ணாடிப் பொருள்களைக் கையாள கண்டித்துச் சொல்லலாம். அதற்காக மரக்கட்டையை குழந்தையின் தலையில் வைத்து



உடைப்பது பெற்றோர்கள் வெளிப்படுத்தும் கோபவெறிச்செயல். தேவையில் உதவி செய்யக்கூடிய நிலையில் உள்ள உறவினர்கள் கேட்டும் உதவி செய்யவில்லையே என்று உறவினர்கள் மீது கோபப்படுவதற்குப் பதில், உறவினர்கள் உதவாத நிலையில் உதவி செய்ய முன்வந்த நண்பர்களை நினைத்து சந்தோசப்படுங்கள்.

**நன்றி உணர்வு (Gratitude) :**

'நன்றி மறப்பது நன்றன்று' என்பதையும், 'Gratitude is a great attitude' என்பதையம் நாம் கேள்விப்பட்டிருப்போம். நமது குடும்பங்களில் அவசியமான இடங்களில் கூட நன்றி என்று கூறும் பழக்கம் கிடையாது. ஒருவர் நமக்கு எதைக் கொடுத்தாலும், நமக்காக எதைச் செய்தாலும், 'நன்றி' என்ற வார்த்தையை உதிர்ப்பதுதான் சரியான பண்பாடு.

பெற்றோர்கள் கடினமாக உழைத்து உணவு, உடை, உறைவிடம் வழங்குவதையும், நல்ல பள்ளிக்கு அனுப்பி படிக்க வைப்பதையும்,பிள்ளைகளுக்காக எல்லாத் தியாகங்கள் புரிவதையும், அவர்கள் குழந்தைகளுக்குச் செய்யும் எல்லாப் பணிகளையும், பெற்றோர்கள் செய்யக் கடமைப்பட்டுள்ளதாக குழந்தைகள், நினைப்பது சரியான அணுகுமுறையல்ல. பெற்றோர்கள் செய்யும் தியாகங்களுக்கு பிள்ளைகள் வாழ்நாள் முழுவதும் நன்றி கூறினாலும் முழுமையாகாது அந்நன்றியறிதல். நன்றியுணர்வு என்பது வெறும் நன்றி என்னும் வார்த்தையில் அல்லாமல் வாழ்வு முழுவதும் நன்றி யுள்ளவர்களாய் வாழ்வதில் வெளிப்பட வேண்டும்.

**பணம் வேண்டும், ஆனால் பணம் குடும்பமாகாது:**

பணம் எவ்வளவு முக்கியம் என்பதை அனைவரும் அறிவோம். இன்றைக்கு கணவனும், மனைவியும் வேலைக்குப் போனால்தான் குடும்பத்தைச் சமாளித்து நடத்த முடியும் என்ற நிலையுள்ளது. வாழ்க்கை வளமாக அமைய பணம் கட்டாயம் தேவை. வளமான வாழ்வு இலக்காக வேண்டும். பணம் வழ்வின் இலக்கானால், எந்த நேரமும் பணம் பற்றியே பேச்சும் மூச்சும் அமையும். வாழ்க்கைக்கு பணம் முக்கியம். ஆனால் பணமே வாழ்க்கையல்ல. இந்த உண்மையை பெற்றோர்கள் புரிந்து கொள்வதும், பிள்ளைகளுக்கு விளக்குவதும் மிகவும் முக்கியமாகும்.

தாய், தந்தைக்கு பணம் பற்றி என்ன அபிப்பிராயம் உள்ளதோ, அதே அபிப்பிராயம்தான் குழந்தைகளுக்கும் இருக்கும். பெற்றோர்கள் தாங்கள் சிறு வயதில் அனுபவித்தவைகளையும், அனுபவிக்க முடியாத சந்தோசங்களையும் தங்கள் குழந்தைகள் அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கின்றனர். அதற்கு வழி ஏற்பட பணத்தை வாழ்வின் இலக்காக்கி உழைக்கின்றனர். குழந்தைகளின் தேவைக்காக மட்டும் செலவு செய்யாமல், அவர்களின் சந்தோசத்திற்காகவும் செலவு செய்ய பெற்றோர்கள் அஞ்சுவதில்லை. இதனால் குழந்தைகள் பணத்தின் அருமையைப் புரிந்து கொள்ளாமல் போய் விடுகின்றனர்.

குடும்பம் வெறும் பணக்கணக்கு அல்ல பணம் பற்றிய முக்கியத்துவம் பற்றியும், பணத்தை பதமாகக் கையாள வேண்டிய நேர்மறை அணுகுமுறையை குழந்தைகளுக்குக் கற்றுத்தர வேண்டும். குழந்தைகளை பணம் சம்பாதிக்கும் இயந்திரங்களாக்கும் எண்ணத்துடன் வளர்க்கும் இன்றைய நிலை வன்மையான கண்டனத்துக்குரியது.

**குழந்தை வளர்ப்பு (Parenting):**

குழந்தை வளர்ப்பது சிலை வடிப்பதற்குச் சமம் என்பார்கள். இரண்டுமே சிக்கலான வேலைகள்தான். ஆனால், சீரிய பணியாகும். ஒவ்வொரு குழந்தைக்குள்ளும் மிகப் புத்திசாலியான, திறமை மிகுந்த மனிதன் ஒருவன் இருக்கிறான். அவனை இனம்கண்டு கொண்டு, அந்த மனிதனைப் படிப்படியாக உருவாக்கும் கடமை ஒவ்வொரு பெற்றோருக்கும் உண்டு.

குழந்தை வளர்ப்பில் உள்ள குணங்களை ஆணுக்குரிய குணாதிசயங்கள், பெண்ணுக்குரிய குணாதிசயங்கள் என்று பிரிக்கலாம். ஆணுக்குரிய குணாதியசாங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். "நேர்மறைக் குணங்கள் - எதிர்மறைக் குணங்கள் என்று", கற்பனைத் திறமை, சாதிக்க வேண்டும் என்கிற மனப்பான்மை போன்றவற்றை நேரிடைக் குணங்கள் என்றும் அழைக்கலாம். ஆண் - பெண் குழந்தைகளில் கற்பனைத் திறமை அதிகமாகப் பெற்றிருந்தாலும், சாதிக்க வேண்டும் என்கிற இலட்சியம் கொண்டு இருந்தாலும் அவர்கள் இருவரிலும் ஆணுக்குரிய நேர்மறைக் குணம் அதிகமுள்ளதாகப் புரிந்து கொள்ளலாம்.

இன்னும் சில குழந்தைகள் அடுத்தவர் மீது அதிகாரம் செலுத்துவதற்கும், மற்றவர்களைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதிலும், பெருமைப்படுத்துவதிலும் ஆர்வமாக இருப்பார்கள். இவர்களில் ஆணுக்குரிய எதிர்மறைக் குணாதிசயங்களின் தாக்கம் மிகுந்த குழந்தைகள் என்று இனம்காண முடியும். இது போலவே பெண்ணுக்கும் நேர்மறை மற்றும் எதிர்மறைக் குணங்கள் உண்டு.

இந்த நேர்மறை மற்றும் எதிர்மறைக் குணாதிசயங்களை 'சக்தி' (எனர்ஜி) என்றும் அழைக்கலாம்.

இந்த நேர்மறை மற்றும் எதிர்மறை எனர்ஜி பற்றி அறிவது அவசியம். ஒரு குழந்தையிடம் காணப்படும் நேர்மறை மற்றும் எதிர்மறை எனர்ஜிகள் எவை என்பதை நுட்பமாக அறிந்து, ஒரு சிறப்பிற்குரிய நுட்பக் கலையுணர்வுடன் செதுக்க வேண்டும்.

ஒரு பெண் குழந்தை பிடிவாதம் பிடிக்கும் குணததிடனும், அடுத்தவர் மீது ஆதிக்கம் செலுத்தும்படியும் இருந்தால் அந்தப் பெண்குழந்தை ஆணுக்குரிய எதிர்மறை எனர்ஜியைப் பெற்றிருப்பதைக் கண்டுணர்ந்து, அவைகளை மேலும் வளரவிடாமல் தடுத்து, ஆணுக்குரிய நேர்மறை எனர்ஜியான கற்பனை வளத்தை வளர்க்கவும் பெண்ணுக்குரிய நேர்மறை எனர்ஜியான பொறுமை மற்றும் (தொடர்ச்சி 10 பக்கம்) >>

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தாரில் மனமலர்வு

சிறுகதை

"மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்." (மத். 6:14)

அது உலகமே விழித்திருந்து குதூகலமாய்க் கொண்டாடும் கிறிஸ்மஸ் பெருவிழா. உன்னத இறைவனின் பிறப்பு விழாவுக்காக நள்ளிரவுப் பூசைக்கான ஆயத்தங்கள் வீடுகள் தோறும் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தன.

"ராஜி ரெடியோ?..." எனக் கேட்டபடி வெளியே செல்ல ஆயத்தமான நிலையில் வந்த பெரிய மகனை ராகினி குழப்பத்துடன் பார்த்தாள். அதே நேரம் சொக்கலேட் பெட்டிகள், புதிய ஆடைகள், குழந்தைக்கான விளையாட்டுச் சாமான்கள் என்று நிறையப் பொருட்களை அடைத்திருந்த ஒரு பெரிய வெளிநாட்டுச் சூட்கேசை உள்ளிருந்து இழுத்துக் கொண்டு வந்த மருமகளைப் பார்த்ததும் ஒன்றும் புரியாதவளாக மகனைப் பார்த்தாள். முகம் இருண்டு போனது. எட்டு வருடம் கழித்து கனடாவிலிருந்து வந்திருக்கும் மகன் மாமியார் வீட்டில் கிறிஸ்மஸ் கொண்டாடப் போகிறானோ என நினைத்துத் திகைத்துப் போனாள். அவள் அந்தஸ்துக்குச் சமனான பணக்காரத் தோழிகளோடு தனது மகன் கனடாவிலிருந்து வந்திருக்கிறான் என்ற பெருமையோடு கிறிஸ்மஸ் கொண்டாடப் போட்ட திட்டங்கள் பாழாகி விடுமோ என்ற பயத்தில் "மகன்.. கனதூரப் பயணமோ?..." என்று கேட்டாள்.

"நாங்கள் ராசன் வீட்டுக்குப் போயிற்று அங்க இருந்து பூசைக்கு வருவம் அம்மா" மகனின் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகளைக் கேட்டதும் காய்ச்சிய ஈயம் காதில் பாய்ந்தது போல் துடிதுடித்து எழுந்தாள். கோபம் முகத்தில் கொப்பளிக்க "உனக்கென்ன பைத்தியமே பிடிச்சிருக்கு? குடும்ப மானத்தைக் காற்றில பறக்க விட்டிட்டு கீழ்ச்சாதியில உள்ள எவளோ ஒருத்தியோட ஓடிப் போனவனை எப்பவோ தலை முழுகியாச்சி... என்னால அவனை மன்னிக்கவே ஏலாது. இனி என்ர சாவுக்கும் அவன் இல்ல.. அங்க போறதை மற்றவை அறிஞ்சா என்ர மானமே போயிடும். அங்க ஆரும் போகக் கூடாது." அவள் குரலில் சாதி வெறி கூப்பாடு போட்டது.

"அம்மா தலை முழுகினது நீங்கள். நாங்கள் இல்ல. அவன் என்ர கூடப்பிறந்த தம்பி. உங்கட சாதியைத் தூக்கிக் குப்பையில போடுங்கோ. எங்கட இனம் சீரழிஞ்சி சிதறிப் போனதுக்கு இந்தச் சாதி வெறிதான் காரணம். வெளிநாட்டிலயும் இந்தச் சாக்கடைப் புத்தியைத்தானே காட்டுகினம்." மகனின் குரலில் வெறுப்பு வெளிப்பட்டது.

"என்ர சொல்லை மீறிப் போனியோ என்னை உயிரோட காண மாட்டாய்." மகன் அலட்டிக் கொள்ளாமல் "அம்மா இது இயேசுவின்ர பிறந்தநாள். அவரின்ர விருப்பப்படிதான் கொண்டாட வேணும். உங்கட பிறந்த நாளை உங்கட விருப்பப்படி கொண்டாடுங்கோ... என்ன ராஜி வாறிரோ?... "ஓம்..ஓம்." அவர்கள் புறப்பட்டுச் செல்வதை ராகினியால் தாங்கவே முடியவில்லை. அவமானத்தில் துடித்தாள்.

"மகன் ஒரு நிமிசம்.." அப்பா ஒரு சிறிய பெட்டியுடன் வந்தார். "நானும் வாறன்.. இவ்வளவு நாளும் தப்புப் பண்ணிப் போட்டன். நீ சொல்றது போல ஆண்டவரின்ர பிறந்த நாளை அவரிட விருப்பப்படிதான் செலிபிரேட் பண்ண வேணும்."

**- ஞானேஸ்வரி -**

"நீங்களும் அந்தக் கீழ்ச்சாதி வீட்டில கை நனைக்கப் போறீங்களோ..."

மனைவியின் அகங்காரமான குரலில் இதுவரை கட்டுப்பட்டு நின்றவர் "ராகினி....எப்ப நம்மட மகன் நீர் கீழ்ச்சாதி எண்டு சொல்ற வீட்டில பெண் எடுத்தானோ அப்பவே நாங்களும் கீழ்ச்சாதிதான்." சூடாகப் பதில் சொல்லி விட்டுப் புறப்பட்டார்.

அவர்கள் காரில் ஏறும்போது கடைக்குட்டி மகள் ஓடி வந்தாள். "அப்பா நானும் சின்னண்ணா வீட்டுக்கு வரப்போறன்." அவர்கள் புறப்பட்டுச் செல்வதை ராகினியால் தடுக்க முடியவில்லை. தனது கௌரவம் பறிபோனது போல் உணர்ந்தாள். தன்னை மதிக்காத தன் குடும்பத்தவர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்க நினைத்தாள். யோசித்து கிறிஸ்மஸ் தினத்தன்று வீட்டில் இருக்கக் கூடாது என்று முடிவு செய்தவளாக தனக்குத் தேவையானவற்றை எடுத்து ஒரு பையில் வைத்துக் கொண்டு அந்த வீட்டை விட்டு வெளியேறினாள். செலவுக்குப் பணம் எடுப்பதற்காக வங்கியினருகே கூட்டம் குறையும் மட்டும் பெற்கார்டைக் கையில் வைத்துக் கொண்டு ஆட்டோவுக்குள் உட்கார்ந்திருந்தாள்.

அப்போது பக்கத்தில் வந்து நின்ற பைக்கிலிருந்து இறங்கிய




அவளது மகன் ராசன் எதிரேயிருந்த கடைக்குள் நுழைய, அவன் மனைவி குழந்தையைத் தோளில் போட்டபடி நின்று கொண்டிருந்தாள். அவர்களைப் பார்த்ததும் ஆத்திரத்துடன் ராகினி அருவருப்பான பிராணியைக் கண்டதுபோல் முகம் சுழித்தாள். இருந்தாலும் தன்னையறியாமல் ஏற்பட்ட ஓர் உந்துதலில் குழந்தையைப் பார்த்தாள். விழிகள் தெறித்து விழுவதைப் போல் பார்த்த கண்களை எடுக்க முடியாமல் பார்த்துக் கொண்டே இருந்தாள். அவளுக்குள் எதுவோ சிலீர் சிலீர் என்று உடைந்து சிதறிக் கொண்டிருந்தது.

சாதி குறைந்த மருமகளின் தோளில் கிடந்த குழந்தை இவளையே பிரதி எடுத்தது போல் இருந்தது. இவளது கன்னக் குழி, உதட்டு மச்சம் எல்லாம் அப்படியே...தானே சாதி குறைவானவளின் தோளில் படுத்திருப்பது போல் அவமானம் பிடுங்கித் தின்றது. எதுவுமே செய்ய முடியாதவளாக முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள். அவள் தன் கண்ணீர் துளிக்குள் ராகினியின் குழந்தை வடிவில் குழந்தை இயேசுவைக் கண்டாள்.

மறுநாள் காலை எதற்காகவோ வாசற்பக்கம் திரும்பிய ராகினியின் கணவர் விழிகள் விரிய நம்ப முடியாமல் "ராகினி" என அழைக்க, எல்லோரும் "அம்மா" என்று ஓடி வந்தனர். கைகள் கொள்ளாத பரிசுப் பொருட்களுடன் கண்ணீர் வழிய நின்றிருந்த அம்மாவின் கால்களில் ராசனும் அவன் மனைவியும் விழுந்தனர். தயக்கத்துடன் உள்ளே வந்தவளின் கண்கள் யாரையோ தேடுவதை உணர்ந்த ராசனின் மாமியார் அவளது கைகளில் பேரக் குழந்தையைக் கொடுத்தார்.

குழந்தையை அணைத்து முத்த மழை பொழியும் அம்மாவின் மனத்தில் ஆண்டவர் இயேசு பிறந்திருப்பதை உணர்ந்த குடும்பத்தவர் வானவெடிகளைப் பறக்க விட்டு மகிழ்ச்சியுடன் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தைக் குதூகலத்துடன் ஆரம்பித்தனர்.

# என் வாழ்வில் இயேசு...



### இயேசு - மகிழ்வின் மகுடம்

அஞ்சாதீர்கள். இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா பிறந்துள்ளார்" லூக் 2:10

இன்று அனைவரின் உள்ளத்தையும் ஆட்சி செய்வது அச்சம். விஞ்ஞானத்தின் விருத்திகள் விண்ணிலே வீடு கட்டிவிட்ட போதும், உலகம் உள்ளங்கைக்குள்ளே குறுகிவிட்டபோதும் மனித மனங்களில் அச்சம் இன்னும் அகலவில்லை அதிகரிக்கின்றது. நிச்சயமில்லாத ஒரு எதிர்காலத்தை நோக்கி, உணர்விழந்து வாழ்வில் பற்றின்றி, தோலால் மூடிய எலும்புக் கூடுகளாக இன்று மனிதர்கள் அர்த்தம் தொலைத்து அசைவாடிக்கொண்டிருக்கிறார்கள். அச்சத்தின் இருட்டுக்குள்ளிலிருந்து மகிழ்வின் விடியலைத் தேடும் மனங்களுக்கு இன்று ஆனந்தப் பெருவிழா. அன்று இடையரின் வாழ்வில் நம்பிக்கைத் தீபமாய், சந்தோச சாரலாய் ஒலித்த அதே மகிழ்வின் வார்த்தைகள், இன்றும் இப்புனித நாளில் நம் வாழ்விலும் எதிரொலிக்கின்றன. மகிழ்ச்சி ஒரு முடிவல்ல - அது ஒரு தொடர் பயணம். இறைவன் இன்று அன்பு நதியாக, ஆனந்த மழையாக எம்மைத் தேடிவந்து ஏகாந்தத்தின் அச்சங்களை நீக்கிட மனிதனாகப் பூமிவந்தார். இயேசு கொணர்ந்த மகிழ்ச்சி எம் வாழ்விலே நம்பிக்கை ஒளியேற்ற, இன்பம் பொங்கும் இப்பண்டிகைத் திருநாளை இனிமையுடன் கொண்டாடுவோம்.

### இயேசு அமைதியின் அரசன்

அவர் வந்து விடுவித்தருளினார், வல்லமையுடைய மீட்பர் ஒருவர் நமக்காகத் தோன்றச் செய்தார்" லூக் 1:70

பதவியும், பணமும், பலமும் ஆட்சி செய்கின்ற இன்றைய உலகில் வலியவருக்குத்தான் வாழ்வு என்னும் தத்துவத்தைப் புரட்டிப் போட்டது நம் பாலன் இயேசுவின் பிறப்பு. அநீதியின் அதிகாரங்கள் உரிமைகளற்ற அடக்கு முறைகள் இவற்றின் மத்தியில் நெருக்கி நசுக்கப்படுகின்ற எளிய மக்களின் உயிர்த்துடிப்பும் அமைதிக்கான அங்கலாப்பும், மன்னர்க்கெல்லாம் மன்னனாய், தலைவர்க்கெல்லாம் அதிபதியாய் அன்பாலே அகிலமாள வந்த இறை இயேசுவின் ஜனனத்தில் ஆறுதல் அடைகின்றன. போலியையும் பொய்யையும் கொண்ட எம் உலகியற் கண்ணோட்டங்களை மாற்றி எம் ஆன்மீக விழிகளைத் திறக்கின்ற போது அன்பர் இயேசு கொணர்ந்த அமைதியை நாம் அனுபவிக்கலாம். எம் துயர் கண்டு எம்மைத் தேடிவந்துள்ள இறைவன் எம் இன்னல்களைத் துடைத்து, சுதந்திரத்தையும் நிம்மதித் தென்றலையும் நாம் சுவாசிக்கச் செய்வார் என்ற நம்பிக்கையோடும், உறங்கும் உண்மைகளுக்கு உயிரளித்து உலகம் தர முடியாத அமைதியை அருள்வார் என்ற உறுதியோடும் பாலகனை வரவேற்போம்.

### இயேசு - தாழ்ச்சியின் சிகரம்

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றினார்" பிலி 2:6.7

அன்புக்காய், ஆறுதலுக்காய், ஆடைக்காய், ஆகாரத்திற்காய் இன்னும் பல உதவிக் கரங்களுக்காக ஏங்கி எதிர்பார்த்து அலைகின்ற இதயங்கள் இங்கு கோடி. மனிதன் ஒரு சமூக விலங்கு என்றும், பல உறவுகளின் தொகுப்பே மனிதன் என்றும் கூறும் நாம், எம் சுய கௌரவம், அந்தஸ்து, சாதி, இனம், மொழி, தேசம் என்ற நிலைகளைத் தாண்டி வர மனத்தில் விருப்பின்றியிருக்கின்றோம். எம்மை நாம் பிறருக்காய் இழக்கத் தயங்குகின்றோம். வாழ்வின் ஒவ்வொரு வினாடியும் எமக்கு ஒரு முறைதான் வழங்கப்படுகின்றது. நாம் வாழ்வதால் எத்தனை பேர் வாழ்ந்தார்கள்? அல்லது வாழ்வுக்கான வழியைக் கண்டார்கள் என்பதில்தான் எம் வாழ்வின் வெற்றியும், அர்த்தமும் புதைந்திருக்கின்றது. விரைந்து செல்வோம். வறண்ட மனங்களிற்கு மகிழ்வின் அன்பின் நீரூற்றி அகிலத்தை பூவனமாக மாற்றுவோம். உருவாக்குவோம். இயேசுவின் பிறப்புக்கு அர்த்தம் கொடுப்போம்.

**அ. துஷ்யந்தன்,**

இறையியல் 4ம் வருடம், தூய சவேரியார் குருத்துவக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனாய் பிறப்போம்



அஞ்ஞானம் ஒழிந்து விஞ்ஞானம் மலர்ந்திருக்கும் இந்நவீன யுகத்திலே கிறிஸ்து பிறப்பு விழா வியாபாரத்திற்கும், ஆடம்பரங்களுக்கும், கேளிக்கை நிகழ்வுகளுக்குள்ளும் மூழ்கிக்கிடப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இன்று மனித மனங்களின் ஆன்மீக சிந்தனைகளற்ற வறண்ட தரிசு நிலம் போல காணப்படுகின்றது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள் ஏனெனில் மரங்களின் வேர்களுக்கிடையில் கோடரி வைத்தாயிற்று" என்று திருமுழுக்கு யோவான் பறைசாற்றியது போலவே இப்பொழுதும் கூறவேண்டி இருக்கின்றது. திருவருகைக் காலமும் தவக்காலமும் ஒன்றே ஏனெனில் இரண்டும் மனமாற்றத்திற்கு அழைப்பு விடுக்கின்றது. ஆகவே கிறிஸ்மஸ் விழா விடுக்கும் செய்தியை அறிவது அவசியமானது.

கிறிஸ்து பிறப்பு விழா என்றவுடன் இனம் புரியாத மகிழ்ச்சியும் ஆனந்தமும் எம் உள்ளத்தை நிறைத்து விடுவது வழமை. இம்மகிழ்ச்சியிலும் ஓர் இறை தேடல், ஆன்மீகத் தயாரிப்பு இருக்க வேண்டும். ஏனெனில் எம்மைச் சுற்றியுள்ள சூழல் சீழ்பிடித்து சிதைந்து கொண்டிருக்கிறது. தினம்தினம் கொத்துக் கொத்தாய் மனிதன் கொலை செய்யப்படுவது வாடிக்கையாய் போய்விட்டது.

– ஆ.எட்வின் நரேஷ்

பாலுணர்வே இன்று மேலோங்கி பாலியல் வன்முறைகள் தலைவிரித்தாடுகின்றது. பணத்திற்காக எதையும் செய்யத் துணியும் நிலை - அன்பு தான், உறவுதான் மகிழ்ச்சி எனற நிலை மாறி, தான் என்ற தனிப்போக்கில் வாழும் நிலைகள் அதிகரித்துவிட்டன. ஆகவே இன்று மனிதன் மதிப்பிழந்து நிர்க்கதியாய் நிற்கின்றான்.

இப்படியாய் சிதைந்து போன சமூகத்தை மீண்டும் கட்டி எழுப்பவே கிறிஸ்து மனிதனாய் இப்பூவுலகில் அவதரித்தார். மெசியா என்பது விடுதலை வீரர், காப்பவர், மக்களைத் தேடுபவர் என்பதே. தொலைந்து போன ஆடுகளாய் திரியும் எம்மை கூட்டிச் சேர்க்கவே மீட்பர் இவ்வுலகில் அவதரித்தார். கிறிஸ்து பிறப்புவிழா பகிர்வின்விழா, அன்பின்விழா, சமாதானத்தின் விழா, மனித நேயத்தின் விழா இயேசு மண்ணிற்கு தன்னையே கொடுத்தார். மானிடத்தை வாழ்விப்பதற்காக தன்னையே கொடுத்தார். இக்கிறிஸ்மஸ் பிறப்பு விழாவில் நாம் கொடுக்கக் கற்றுக் கொள்வோம். கொடுப்பதில் மகிழ்ச்சியைக் காண்போம். ஏழை எளிய சின்னஞ் சிறியோருக்கு நாம் செய்யும் உதவியெல்லாம் இயேசுவிற்கு செய்யும் உதவியாகும் (மத்தே 25:34-40)

மனித மாண்பு மண்ணிலே மலர்ந்திடவே மாபரன் இயேசு மனிதனாக மண்ணில் மலர்ந்தார். இயேசுவின் பிறப்பு நம்மில் வாழ்வாகட்டும். புதிய சமுதாயம் புதுப் பொலிவோடு எழட்டும். யோவான் 3:3ல் உள்ளபடி மீண்டும் பிறப்போம். இப்பிறப்பு உடல்சார்ந்த பிறப்பல்ல உள்ளம் சார்ந்த பிறப்பு. நாம் கிறிஸ்துவாகப் பிறக்க வேண்டியதில்லை. முதலில் நாம் மனிதனாக மனித மாண்பை கட்டி எழுப்பும் மனிதனாக மண்ணில் மீண்டும் பிறப்பெடுப்போம்.

வாழ்வாகி, வழியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி உண்மையாய் எம் நடுவில் பிறக்கும் இறைவனை வரவேற்க உள்ளத்தைத் தயார்ப்படுத்துவோம் ●

---

## எம் குடும்பங்கள்...

(08ஆம் பக்க தொடர்ச்சி )

பொறுப்புணர்வையும் வளர்க்க வேண்டும்.

பெற்றோர்கள் எல்லாம் தெரிந்த அறிவு ஜீவிகளாகத் தங்களைக் காட்டிக் கொண்டு, குழந்தைகளை அதட்டுவதும், மிரட்டுவதும், அதிகாரம் செலுத்துவதும் கூடாது. குழந்தைகளிடமிருந்தும் ஏதாவது ஒன்றைப் புதிதாகக் கற்றுக்கொள்ளலாம் என்ற திறந்த மனத்துடன் பெற்றோர் பிள்ளை வளர்ப்பில் ஆர்வம்காட்ட வேண்டும்.

குழந்தை வளர்ப்பில் புதிதாக அவர்களில் நாம் எதையும் உருவாக்குவதை விட, எவற்றைத் தவிர்க்க வேண்டுமோ அவற்றை அறிந்து, அவைகளைத் தவிர்ப்பதே உண்மையான குழந்தை வளர்ப்பாகும்.

பெற்றோர்களே! குழந்தைகளுக்குச் சுதந்திரம் கொடுங்கள், கட்டுப்பாட்டையும் கடைப்பிடியுங்கள். அது எப்படி முடியும் என்கிறீர்களா? கட்டுப்பாடும், சுதந்திரமும் மனிதவாழ்வுக்கு அவசியமான அம்சங்கள்.

குழந்தைகளுக்குக் கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம் வழங்குங்கள். குழந்தைகள் பொறுப்புணர்ந்து வாழ கற்றுக் கொடுங்கள். கட்டுப்பாடு இல்லாத சுதந்திரம் காட்டாற்று வெள்ளம் போன்றது. குழந்தைகளைக் கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிக்காமல் இருப்பதும் தவறு. தட்டிக் கொடுத்து அரவணைக்க வேண்டிய ஆறுதல் வழங்க வேண்டிய சூழ்நிலைகளில் அப்படிச் செய்யாமல் இருப்பதும் தவறான குழந்தை வளர்ப்பாகும். பெற்றோர்களே! சின்னஞ்சிறு விசயங் களை அலட்சியப்படுத்தாதீர்கள். பெரும் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டி வரும். எனவே, சின்னச் சின்ன விசயங்களையும், சீரியஸாக எடுத்துக் கொள்ளுங்கள்.

அதன் பலனைக் குழந்தைகளில் காண்பீர்கள். குழந்தை வளர்ப்பு இன்று அதீதக் கவனம் பெற வேண்டிய விசயம். பல பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகள் போதை மருந்துக்கு அடிமையாகி விட்டதாகவும், புகைப்பழக்கத்திற்கும், மதுவிற்கும் அடிமையாகியுள்ளதாகவும் கூறி அறிவுரை தேடி அலைகின்றனர். இதுபோன்ற பிரச்சினைகளுக்கு, பிள்ளைகள் மீது அக்கறையின்மையும், கட்டுப்பாடு இல்லாத சுதந்திரம் கொடுத்து விட்டதுமே காரணமாகும்.

கோவிலாகக் குடும்பத்தைக் கருதுவோம். வாழ்க்கை என்பது ஓர் உயிரோட்டமுள்ள அனுபவம். மதிப்பு வாய்ந்த ஒன்று. அதனை அர்த்தமுள்ளதாக்குவது குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரின் கடமையாகும்.

குடும்பம் என்பது தனி நபர்கள் சேர்ந்து வாழும் இடமல்ல. கணவன் - மனைவி - குழந்தைகள் என்று பல தரப்பட்டவர்களின் மனங்கள் ஒரே இலட்சியத்துக்காக இணைந்து வாழ்வது. குடும்பம் மட்டுமே இச்சமுதாயதிற்கு ஏற்ற குணவான்களை குடிமக்களாய் வழங்க முடியும் ■

---


திருமண வாழ்வின் முப்பத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்து விழாக்காணும்
எமது பாசமிகு பெற்றோருக்கு எமது வாழ்த்துக்கள்

**மரியராசா பிலசிதம்மா தவறஞ்சிதம் தம்பதியினர்**



எம்மைத் தாலாட்டி சீராட்டி
இந்த உலகில் வாழ வழிகாட்டி
முப்பத்தைந்து ஆண்டுகள்
இணைந்து காலத்தைக்
கடந்து வரும் கண்காணும்
தெய்வங்களுக்கு
எமது நல்வாழ்த்துக்கள்



அன்று 1979.12.25

இன்று 2014.12.25

பிள்ளைகள்
றாஜூ, ஸ்ரெலா, றமேஷ், றஜன், கிறேசி.
மருமகன் : உதயகுமார், கொடிகாமம்.

## 70ஆவது பிறந்த நாள் வாழ்த்து

சாமஸ்ரீ தேச கீர்த்தி
திருமதி கெலன் பிலிப்



எமது அன்புத்தாயார் சாமஸ்ரீ தேச கீர்த்தி
திருமதி கெலன் பிலிப் அவர்களின்
70ஆவது பிறந்த தினத்தில்
அன்னை இன்னும் பல பணி செய்து
பல்லாண்டு காலம் நோய் நொடி
இன்றி வாழ இறைவனை வேண்டி
பிள்ளைகள் நாம்
வாயார வாழ்த்துகின்றோம்

பிலிப் குயின்சி குடும்பம்
பொனிபேஸ் றூபி குடும்பம்
ஜெயக்குமார் றொபினா குடும்பம்
டிக்சன் சீதா குடும்பம்
ஜோதி றாணி குடும்பம்
றொபின்சன் பெலன்னிலா குடும்பம்.

2ம் குறுக்கு வீதி, பாசையூர்

## 12ம் ஆண்டு நிறைவில்

அன்னையின் மடியில் 1942 . 06 . 07



ஆண்டவன் அடியில் 2002 . 11 . 28

**அமரர் ஆதாம் தோமஸ்**

"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம்
அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"

அன்பும் பாசமும் இரக்கமும்
கடமை உணர்வும் பொறுப்புணர்வும்
கொண்ட எம் அன்புள்ள ஐயா
துவண்டிடும் வேளையில் துணையாக அணைப்பீரே
ஆண்டவரின் அன்பைக் கூறுவீரே
எம் உள்ளங்களில் அழியாத
நினைவுகளுடன் நிலையாய் இருக்கின்றீர்

என்றும் அன்புடன்
பாசமிகு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பருத்தித்துறை.

Add 103/14

## 19ம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 1950 . 03 . 24



உதிர்வு 1995 . 12 . 18

**அமரர் தேவசகாயம் சிமியோன்**
(அனிபபா)

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

ஆண்டுகள் பத்தொன்பது ஆனதா? ஐயா
ஆறவில்லை எம் இதயம்
இன்றுவரை நம்பமுடியவில்லை – நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர் என்று
வாழ்ந்திடும் காலமெல்லாம் – நாம்
மறப்போமா உம் சிரித்த முகத்தை?
வருந்தி நாம் அழைக்கின்றோம் – எம்முடன்
திரும்பவும் வந்து சேர்ந்திடுவீர்கள்! ஐயா

நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.

இவரின் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்.

## 3rd Year Remembrance

12 . 07 . 1942



22 . 12 . 2011

**Dr. Maricileenpillai Mariathasan (JP)**
Medical Officer of Health (2001 - 2011)
Municipal council Jaffna.

Appa
The Beauty of your smile - still
Brightens up our day
The Kindness and compassion
which Filled your heart - Inspired us
you are in our Hearts, you walk beside us
- unseen, unheard
But always near.

"AVE MARIA"
92 Temple Road
Jaffna.

Add 104/14

Fondly Remembered by
Wife, Children and Relatives


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க திருச்சபையில் அர்ப்பணவாழ்வு

**- ஜெராட் டீ றொசய்றோ, அ. ம. தி -**

'திருச்சபையில் அர்ப்பணவாழ்வு' பற்றி சிந்திக்கவும், திருச்சபையில் பல்வேறு நிலைகளில் கிறிஸ்தவ அர்ப்பணத்தை வாழ்பவர்கள் தத்தம் அர்ப்பணத்தைப் புதுப்பித்துக் கொள்ளவும், ஒருவரொருவருடன் புரிந்துணர்வை வளர்த்து இறைமக்கள் சமூகமான திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் வளம் சேர்க்கவும் இவ்வருடம் கார்த்திகை மாதம் 30ம் திகதி முதல் 2016ம் ஆண்டு மாசி மாதம் 2ம் திகதி வரையான காலப் பகுதியை செலவிடுமாறு திருத்தந்தை பிரான்சிஸ் அகில உலகத் தோலிக்க சமூகத்தைக் கேட்டுள்ளார்.

**ஏன் அர்ப்பணவாழ்வு ஆண்டு?**

இக்காலப் பகுதியை திருத்தந்தை அவர்கள் தேர்ந்தெடுப்பதற்கான பல காரணிகள் உண்டு. அவற்றுள், இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட 'துறவற வாழ்வைப் புதுப்பித்தல்' என்ற விதித் தொகுப்புக்கு (கார்த்திகை, 1965) ஐம்பது வருடங்களாகின்றன. ஆக, வத்திக்கான் சங்கத்தின் அர்ப்பண வாழ்வின் புதுப்பித்தலுக்கான அறிவுரைகளின் ஒளியில் கிறிஸ்தவ அப்பணத்தை ஆழமாக மீளாய்வு செய்யவும் புதுப்பிக்கவும் வேண்டிய தேவை எழுந்திருப்பது முதன்மைக் காரணியாகும். அடிப்படைக் கிறிஸ்தவ அர்ப்பணத்தைப் பல்வழித்தேர்வுகள் வழியாக வாழும் பாங்கில் தூய்மைப்படுத்தவும், ஆழப்படுத்தவும் தேவைகள் எழுந்திருப்பது ஏனைய காரணிகளாகும்.

**திருச்சபையில் பல்முக அர்ப்பணவாழ்வு:**

இறைமக்கள் சமூகமாகிய திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் அடிநாதச் சுரமாய் இருப்பது கிறிஸ்தவ அர்ப்பணமாகும். திருமுழுக்கு வழியாக ஆரம்பிக்கும் கிறிஸ்தவ அர்ப்பணம், உறுதிப்பூசுதல் வழியாக உறுதிப்படுத்தப்படுகின்றது. இவ்வடிப்படை அர்ப்பணத்தை கிறிஸ்தவர்கள் பல்பரிமாணங்களில், பல்வேறு வாழ்க்கை நிலைத்தேர்வுகளின் வழியாக வாழ்விக்கின்றனர். இன்றைய சூழமைவில் பல்முகங்கொண்ட கிறிஸ்தவ அர்ப்பண வாழ்வு நிலையினர் மத்தியில் பல சவால்கள் எழுந்துள்ளன. எடுத்துக்காட்டாக, கிறிஸ்தவ அர்ப்பணத்தை வாழ குடும்ப வாழ்வை ஏற்றுக் கொண்ட குடும்பங்களில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. கிறிஸ்தவ அர்ப்பணத்தை வாழ மணத்துறவு நிலையைத் தேர்ந்தெடுத்தவர்கள் மத்தியில் அவர்களது நிரந்தர அர்பணம், குழுமவாழ்வு, பணி பற்றிய கேள்விகள் எழுந்துள்ளன. கிறிஸ்தவ அர்ப்பணத்தை குருத்துவ வாழ்வு நிலையில் வாழ்பவர்களின் வாழ்வு பற்றிய கேள்விகள் எழுந்துள்ளன. மேலும், குடும்ப வாழ்வையோ, மணத் துறவு வாழ்வையோ, குருத்துவ வாழ் வையோ ஏற்காமல் தனித்தோ, தனிக் குழுக்களாகவோ இறைவனுக்குத் தம்மை அர்பணித்துக் கொண்டு வாழும் பொது நிலையினர் உள்ளனர்.

அவர்களின் வாழ்க்கைத் தேர்வு திருச்சபையில் அவர்களின் இடம், பணி பற்றிய பல கேள்விகள் எழுந்துள்ளன. இவை எல்லாம் கிறிஸ்தவ அர்ப்பணம் பற்றி சிந்திக்கவும், புதப்பிக்கவும் எழுந்துள்ள ஏனைய காரணிகளாகும். இங்கு, திருச்சபையில் மணத்துறவு அர்ப்பண வாழ்வின் ஆரம்பமும், அடிப்படை இயல்பும் பற்றிய இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினையைக் காணலாம்.

**மணத்துறவு அர்ப்பண வாழ்வின் தோற்றமும், இயல்பும்:**

மணத்துறவு அர்ப்பண வாழ்வு கத்தோலிக்க திருச்சபையில் நிலையான அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கை முறையாகும். அவ்வாழ்க்கை முறை இயேசுக் கிறிஸ்துவால் ஆரம்பிக்கப்பட்டது என்பதற்கு நற்செய்தி ஆதாரங்கள் இல்லை. ஆனால் இயேசு இறைவன் ஒருவருக்கே மரணம் மட்டும் கீழ்ப்படிந்து வாழ்ந்த பாங்கும், இறையாட்சி பற்றிய அவரது தெளிவான, உறுதிப்பாடான படிப்பினைகளும், அறிவுரைகளும், இறையாட்சி விழுமியங்களை வாழ அவரைப் பின்பற்றுமாறு அவர்விட்ட அழைப்பும் மணத்துறவு அர்ப்பண வாழ்வுக்கு அடிப்படை தூண்டுதலாகவும், ஆதாரமாகவும் அமைந்துள்ளது. ஆக, இயேசுவின் பாங்கில் கீழ்படிவு, தூய்மை, ஏழ்மை எனும் மூன்று நற்செய்தி அறிவு கைளை ஏற்றும், நேர்ச்சைப்பாடுகள் வழியாகவும் இறைவனுக்கு ஒருவர் தன்னை அர்ப்பணித்த வாழ்வு மணத்துறவு அர்ப்பண வாழ்வாகும். திருமுழுக்கு வாழ்வை வெளிப்படையாக, சாட்சியத்தன்மையுடன் வாழும் நிலையாகும்.

இவ்வர்ப்பண வாழ்க்கை குருத்துவ வாழ்க்கை முறைக்கும், திருமண வாழ்க்கை முறைக்கும் இடைப்பட்ட ஒரு நிலையல்ல. மாறாக, திருச்சபையில் தனிப்பட்ட கொடையை வாழும் பாங்காகும். திருச்சபையின் மறைபொருளான மூவொரு கடவுளின் பிரசன்னத்துக்கும், வாழ்வுக்கும் வெளிப்படையான சாட்சியமும், அடையாளமும் ஆகும் வாழ்க்கை நிலையாகும். திருச்சபையின் நிறைவாழ்வுப் பணியில் பிரிவுபடாத மனநிலையுடன் உதவ திருச்சபையில் பெற்ற அழைப்பாகும் (2ம் வச, திருச்சபை, 43).

மேலும், திருச்சபையில் இவ்வாழ்க்கை முறையானது காலத்துக்குச் காலம் பல கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொண்ட தூய ஆவியின் தூண்டுதலின் விளைவாகத் தோன்றியுள்ளது. அத்தகையவர்கள் அவர்கள் வாழ்ந்த காலச்சூழலில்

**அர்ப்பண ஆண்டு - 2015**

எழுந்த தேவைகளை அவர்களது விசுவாசத்தின் ஒளியில் ஆய்ந்து, கிறிஸ்தவ அர்ப்பணத்தை நற்செய்தியின் ஒளியில் வாழுவதற்குப் பெற்ற உள்ளுக்கத்தின் விளைவாகும். இரண்டாம் நூற்றாண்டில் ஆசியாவில் தோன்றிய வனத்துறவிகளின் வாழ்க்கை முறையும், மேற்கத்தேய நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட மடத்துறவற வாழ்க்கை முறையும் மணத்துறவு வாழ்க்கை நிலையின் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து 12ம் நூற்றாண்டில் தோன்றிய ஏவலர்கள் துறவு வாழ்க்கையும், சமய மறுமலர்சிக்காலத்தின் பின்னர் தோன்றிய மறைபரப்பு துறவற வாழ்க்கை முறையும், திருச்சபையின் வரலாற்றில் பிற்பட்ட காலத்தில் தோன்றிய பல துறவறசபைகளும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

திருச்சபையில் பல்வேறு காலகட்டங்களில் தோற்றம் பெற்ற இத்துறவற வாழ்க்கை இயேசு தம் சீடருக்கு எடுத்தியம்பிய வாழ்க்கை முறையைத்தான் நெருங்கிப் பின்பற்றுகிறது. அதைத் திருச்சபையில் பிரதிபலிக்கச் செய்கிறது. இவ்வாழ்க்கை முறை இறையாட்சிக்குள்ள உன்னத தேவையை தனிப்பட்ட முறையில் அறிவிக்கின்றது. தூய ஆவியின் தூண்டுதலுக்குக் கீழ்படிந்து நற்செய்தி விழுமியங்களை வாழும் முறையைதத்தம் சூழலில் மக்கள் மத்தியில் வாழந்து காட்டும் முறையாகும் (2ம் வச.,திருச்சபை, 44). மேலும், மூன்று நற்செய்தி அறிவுரைகளை வெளிப்படையாக ஏற்பதால், அவை இதயத்தூய்மையுடன், ஆவிக்குரிய சுதந்திரத்துடன் வாழ தூண்டுதலளிக்கின்றன. கிறிஸ்தவ சமூகம் தமது கிறிஸ்தவ வாழ்வை இதயத் தூய்மையுடனும், உளச்சுதந்திரத்துடனும் வாழ அவ்வாழ்க்கைமுறை துணை புரிகின்றது (2ம் வச.,திருச்சபை, 46).

**மணத்துறவு வாழ்வுக்கான அடிப்படைகள்:**

'துறவற வாழ்வைப் புதுப்பித்தல்' எனும் விதித்தொகுப்பில் துறவற வாழ்க்கை அர்ப்பணம் புதுப்பிக்கப்படவும், ஆழப்படுத்தப்படவும் மணத்துறவு அர்ப்பணம் செய்தவர்கள் மூன்று அடிப்படை ஆதாரங்களுக்கு உண்மைத்தன்மையுடன் வாழ வேண்டும் என இரண்டாம் வத்திக்கான் சங்கம் அறிவுறுத்துகின்றது.

1.துறவற வாழ்வின் அடிப்படை அளவுகோல் நற்செய்தி எடுத்து ரைக்கும் முறையில் கிறிஸ்துவைப் பின்பற்றுவது. 2. துறவறசபை நிறுவுனரின் நோக்கம், அவரது தனிப்பட்ட திட்டம், நல்மரபுகளை குடும்பச் சொத்தாகப் பற்றுதியோடு ஏற்றுப் பேணுதல். 3.இன்றைய சூழ்நிலையை கிறிஸ்தவ விசுவாசத்தின் ஒளியில் பகுத்தறிந்து, திருத்தூது ஆர்வக் கனலுடன் மக்களுக்குப் பணிபுரிதல் (2ம் வச.,துவாபு, 2) என்பன அவ்வடிப்படை ஆதாரங்களாகும். ஆக, துறவறச் சபைகள் தத்தம் ஊற்றுக்களில் ஊன்றி நின்று, இன்று மக்கள் வாழும் சூழல் கள், பின்னணிகள், இடங்களில், தம் மூலக் கூறுகளை இனங்கண்டு, அவற்றுக்குப் புதுமெருகூட்டி, பணிக் குறிக்கோள்கள் பற்றிய தெளிவான கண்ணோட்டம் பெறுவதே 'துறவற வாழ்வைப் புதப்பித்தலாகும்' ■

---

சிங்களக் கட்சிகளின்... (4ம் பக்கத் தொடர்ச்சி) யோசிக்கலாம் என இந்தக் கட்சிகள் முடிவு செய்திருக்கின்றன. சம்ஸ்டிமுறை பற்றி பேச முடியாது என பொதுவேட்பாளர் மைத்திபாலசிறிசேன கூறியுள்ளார். ஆனால் 13 பிளஸ் தான் தீர்வு என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா உறுதியளித்துள்ளார். ஆக இனப் பிரச்சினை விடயத்தில் முன்னுக்குபின் முரணான கருத்துக்கள் தான் பொது எதிரணியிடம் உண்டு

**வெற்றி பெற்ற பின்னர்?**

ஆகவே பொதுவேட்பாளர் வெற்றிபெற்ற பின்னர் இரண்டு விடயங்கள் தொடர்பான கேள்விகள் எழவுள்ளன. ஒன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூறுவது போன்று இனப்பிரச்சினை என ஒன்று இல்லை என்பதும் இருக்கினற அரசியல் யாப்பில் உள்ள நிர்வாக அதிகாரங்களைத் தவிர வேறுஎதையும் ஏனைய சமூகங்கள் கோர முடியாது என்றும் பொதுஎதிரணி நிபந்தனை விதிக்கலாம்.

இரண்டாவது அரசியல் கட்சிகளின் தனித்துவம் இல்லாமல் போய் சிங்கள பௌத்த தேசிய வாதத்தைத் தனியுரிமை இல்லாமல் ஒரு தேசிய மட்டத்தில் செயற்படுத்தக் கூடிய வலுவான ஒரு சிங்களத் தேசிய இயக்கம் ஒன்று உருவாகலாம். இந்த இரண்டு விடயங்களும் பொதுவேட்பாளர் மைத்திபாலசிறிசேன வெற்றி பெற்ற பின்னர் சாத்தியப்படக் கூடிய அரசியல் நிலைமைகள் உள்ளது என்பதை அவர்களுடைய செயற்பாடுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

சிங்கள பௌத்த தேசியவாதம் என்பதை அரசியல் மூலதனமாக் கொண்டு பொதுஎதிரணி செயற்படுவது போன்று தமிழ் மக்களுக்கானஅரசியல் அபிலாஷைகள் என்பதை முன்னிலைப்படுத்தி தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் தேசிய இயக்கமாக செயற்பட வேண்டும். நான்கு கட்சிகளை மையப்படுத்தி தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எவ்வாறு செயற்பட்டு வந்ததோ அதே போன்ற ஒரு அரசியல் நகர்வைத்தான் பொதுஎதிரணி முரண்பாட்டிலும் ஓர் உடன்பாடாக மேற்கொண்டு வருகின்றது என்பதைத் தமிழ்த் தரப்பு உணர வேண்டும். யேசுபிறப்பின் காலத்திலும் புத்தாண்டிலும் மாற்றுச் சிந்தனை உருவாகட்டும்? ●

---

## திருத்தந்தையின் திருப்பலிக்கு கொழும்பு செல்வோர் கவனத்துக்கு

ஜனவரி மாதம் 14ஆம் திகதி கொழும்பில் திருத்தந்தை ஒப்புக் கொடுக்கும் திருப்பலியில் கலந்து கொள்ள விரும்புவோரின் பெயர்ப்பட்டியல் சில கிடைக்கப்பெற்றுள்ளது. அவர்களுக்கான பயண ஒழுங்குகள் பற்றிய விபரம் உங்கள் பங்குத்தந்தையர் வழியாக அறியத்தரப்படும்.

**- அருட்பணி. சாள்ஸ் கொலினஸ்**

## பாதுகாவலன் நேயர்களின் கனிவான கவனத்துக்கு

அச்சுத்தாள் விலையேற்றம் மற்றும் தபால் செலவு அதிகரிப்புக் காரணமாக பாதுகாவலன் பிரதியின் விலையை புத்தாண்டு முதல் 20ரூபாயாக மாற்றியுள்ளோம். ஆண்டு சந்தாக்காரர்களுக்கான கட்டணமாக ரூபாய்.850 அறவிடப்படவுள்ளது. அசௌகரியத்துக்கு வருந்துகிறோம்.

**- ஆசிரியர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தந்தையின் கிறிஸ்மஸ் செய்தி



கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தம் செய்கிற நாம் அவர் வரும்போது அவருடைய பிரசன்னத்தை முழுமையாக அனுபவித்து அவர் கொண்டு வருகின்ற ஆறுதலை எமதாக்க முயற்சிக்க வேண்டும் என்று எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

உண்மையான ஆறுதலின் ஊற்றும் உறைவிடமுமாகிய தந்தையிடமிருந்து எம்மைச் சந்திக்க வருகின்ற இறைமகனாகிய கிறிஸ்து, வாழ்வில் பல்வேறு சுமைகளோடு கலங்கும் எம்மைத் தேற்றுவதற்காக அந்த ஆறுதலைச் சுமந்து வருகின்றார். நாம் ஒவ்வொருவரும் அவர் கொண்டு வரும் ஆறுதலைத் தவறாமல் பெற்றுக் கொள்ள வேண்டும். முதலில் நாம் பெற்றுக் கொண்டால்தான் மற்றவர்களுக்கும் அந்த ஆறுதலைக் கொடுக்க முடியும் என்றும் திருத்தந்தை கூறினார்.

இரக்கம், ஆறுதல், நம்பிக்கை என்பவைதான் கிறிஸ்து எமக்குக் கொண்டு வரும் கொடைகள் என்றும் எமது கடினமான வாழ்வுப் பாதையில் இறைவனின் இரக்கமும் ஆறுதலும் எமக்குத் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்கும் என்பதை நாம் மறந்து போகக்கூடாது என்றார். கிறிஸ்துவின் பிறப்பு உங்கள் கலக்கங்களில் ஆறுதலையும், துன்பங்களில் மகிழ்ச்சியையும், பயங்களில் நம்பிக்கையையும் தருவதாக அமையட்டும் என்று அவர் இறைமக்களை வாழ்த்தினார்.

# ஆயரின் கிறிஸ்மஸ் செய்தி



அகிலம் முழுவதற்கும் அன்புத் தெய்வமாய், ஆதரவு அற்றோருக்கு அடைக்கலமாய் திகழும் கிறிஸ்துவின் பிறப்புவிழா மீண்டும் ஒருமுறை எம்மை எதிர் கொள்கின்றது இக்காலத்தில் அனைத்து மக்களின் விடிவிற்காய் பாலனாகப் பிறந்த ஆண்டவர் இயேசுவின் வருகையையும் கொண்டாடி மகிழ்கின்றோம். கிறிஸ்து பிறப்பு கிறிஸ்தவர்களுக்கு மட்டும் உரியது அன்று. அவரது பிறப்பால் அனைத்துலகமும் ஒளிபெற்று இருள் அகன்று மகிழ்கின்றது. எம்மைப் பிரிக்கும் மத இன மொழி வேறுபாடுகளைக் கடந்து நாம் ஒரு தாய் மக்கள் என எம்மை ஒற்றுமைப்படுத்தும் இயேசுவின் பிறப்பால் நாம் உயர்வு பெறுகின்றோம்.

நீண்டகாலமாக வரண்டு கிடந்த எம் மண்ணும் தொடர் மழையால் குளிர்ச்சி கண்டுள்ளது. மழைநீரால் நிரம்பி வழியும் கிணறுகளும் குளங்களும் உழவர் மனதை மகிழ்வித்துள்ளது. இயற்கையில் இறைவன் நம்முடன் வாசம் பண்ணுவதன் அடையாளங்களாக இவற்றைக் கொள்ளலாம்.

இந்நிலையில் இலங்கையின் அப்போஸ்தலர் என வர்ணிக்கப்படும் புகழ் பெற்ற யோசப்வாஸ் அடிகளின் புனிதர் பட்டவிழாவும், திருத்தந்தையின் வடக்கு விஜயமும் மகிழ்வு தரும் வேளையில் இயேசுவின் பிறப்பு விழா அமைவது இரட்டிப்பான மகிழ்வை எமக்குக் கொடுத்து நிற்கின்றது.

புதிய ஆண்டில் குடும்பங்களும் அர்ப்பணவாழ்வும் எனும் கருப்பொருளில் சிந்திக்கவுள்ள நிலையில் நாம் அனைவரும் அர்ப்பணம் நிறை மக்களாக வாழ அழைக்கப்படுகின்றோம். குடும்பங்களில் அர்ப்பணவாழ்வும் புனிதமும், பகிர்தலும் நிறைந்திட ஆசிக்கின்றேன். இப்புத்தாண்டில் மற்றும் ஒரு விடயமாக ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளோம். இத்தருணத்தில் நாம் நன்கு சிந்தித்து நம் நாட்டுக்குத் தேவையான பரந்த மனம் கொண்ட தலைவரைத் தெரிவு செய்வதன் மூலம் நிலையான அமைதியை எம் மண்ணிற்குக் கொணர முயற்சிப்போம்.

இப்புதுவருடத்தில் எல்லா வகையான துன்பங்களில் இருந்தும் உங்களைக் காத்து அன்பும் அமைதியும் நிறைந்த குடும்பங்களாக அனைவரும் அர்ப்பண உணர்வுடன் வாழ்ந்திட பாலன் இயேசு ஆசி வழங்கிக் காப்பாராக, அனைவருக்கும் எனது செபமும் அன்பும் நிறைந்த நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறி நிற்கின்றோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
யாழ். ஆயர்

# குருமுதல்வரின் கிறிஸ்மஸ் செய்தி

"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்"
எசாயா 9:2



கிறிஸ்து பிறப்புக் காலத்தில் நாங்கள் கேட்கின்ற இறைவாக்கினர் எசாயாவின் இந்த தீர்க்கதரிசனம் எங்கள் உள்ளத்தை ஒரு போதும் தொட்டுவிடத் தவறுவதில்லை. இது சாதாரணமாக உணர்வுகளைத் தூண்டிவிடுகின்ற ஒரு தீர்க்கதரிசனம் மட்டும் அல்ல, மாறாக எங்களை சிந்திக்கத் தூண்டி நாங்கள் எந்த நிலையில் இருக்கிறோம், வாழுகிறோம் என்பதை எடுத்துக்காட்டுகின்ற ஒரு தீர்க்கதரிசனமுமாகும். எங்களுக்குள்ளும் எங்களைச் சூழ்ந்து வாழுகின்ற மக்களுக்குள்ளும் இருளும் ஒளியும் பரவிக் கிடக்கின்றது. இருள் தனது ஆதிக்கத்தால் இந்த உலகை மூடிவிடுகின்ற போது எங்களை ஆச்சரியப்படுத்தி வியப்பூட்டும் சம்பவமாக அந்த இருளுக்குள் நடக்கின்ற மக்கள் ஒரு புதிய ஒளியைக் காணுகின்றார்கள். அந்த ஒரு ஒளி "நடத்தல் - காணுதல்" என்ற பரம இரகசியத்தைப் பற்றி சிந்திக்க எங்களைத் தூண்டுகின்றது.

"நடத்தல்" இந்தச் சொல் நீண்ட மீட்பின் வரலாற்றுப் பயணத்தைப் பற்றிச் சிந்திக்க எங்களைத் தூண்டுகின்றது. இறைவனால் வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிப் பயணித்த மக்கள் கொண்டிருந்த விசுவாசத்தைக் கொண்ட மக்களாக நாங்களும் உருவாகியிருக்கிறோம். இந்த மீட்பின் வரலாறு கடவுளின் உடனிருப்பாலேயே நடந்தேறியது. இருந்தபோதிலும் இறைமக்களின் வாழ்வில் ஒளியும் இருளும், நேர்மையும் பொய்மையும், கீழ்ப்படிவும் எதிர்ப்பும் காணப்படுகின்றன. சில சமயங்களில் இவர்கள் கடவுளை நோக்கிப் பயணிக்கின்ற யாத்திரிகயர்களாகவும், சில சமயங்களில் நிலைதடுமாறி விசுவாசம் ஆட்டம் காணுகின்ற மக்களாகவும் இருக்கின்றார்கள்.

இருப்பினும் வானதூதர் "அஞ்சாதீர்கள், இதோ.எல்லாமக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" (லூக்கா 2:10) என்று இடையர்களுக்கு அறிவித்து நம்பிக்கையின் ஒளியைக் கொடுத்தது போல இறைமக்களாகிய எமக்கும் கிறிஸ்துவின் பிறப்பு நம்பிக்கையைக் கொண்டு வருகின்றது.

ஆக மலரும் புதிய ஆண்டில் குடும்பங்களில் அர்ப்பணவாழ்வின் மேன்மையை உணர்ந்து ஒருவர் ஒருவருக்கு குழந்தை இயேசுவின் நம்பிக்கையைக் கொடுத்து வாழ்வோமாக. பிறக்கும் புதுவருடம் சமாதானமும், மகிழ்வும் நிறைந்தததாக அமையட்டும்.

**அருட்தந்தை ஜஸ்ரின் B.ஞானப்பிரகாசம்**
குருமுதல்வர், யாழ்மறைமாவட்டம்

## சுனாமி அனர்த்தத்தின் 10வது ஆண்டு நினைவு



சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பத்தாவது ஆண்டின் நினைவு நிகழ்வுகள் கரித்தாஸ் - செடேக் நிறுவனத்தினால் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்விற்கு உலகளாவிய அனைத்து கரித்தாஸ் இயக்குனர்களும் அங்கத்தவர்களும் வருகை தந்திருந்தார்கள். சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட நாடுகளான இலங்கை, இந்தியா, இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த கரித்தாஸ் நிறுவனத்தினால் பயனடைந்த மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சுனாமி நினைவுத் தூபியில் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

24 ஆயர்கள் கலந்து கொண்டு சுனாமி அனர்த்தத்தில் இறந்த மக்களுக்காகத் திருப்பலி நிறைவேற்றினார்கள்.

மேலும் நான்கு நாடுகளையும் சேர்ந்த கரித்தாஸ் நிறுவனத்தினால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்யப்பட்ட உதவித் திட்டங்கள் பற்றிய விவரணப் படங்களும் ஒளிபரப்பப்பட்டன.

## பேராலயத்தில் கிறிஸ்து பிறப்பு மற்றும் புது வருடத் திருப்பலிகள்

| கிறிஸ்து பிறப்பு | புதுவருடம் |
|---|---|
| நள்ளிரவுத் திருப்பலி : 11.45 (ஆயர் தலைமையில்) | நள்ளிரவுத் திருப்பலி : 11.45 |
| முதலாம் திருப்பலி : காலை 06.00 | முதலாம் திருப்பலி : காலை 06.00 (ஆயர் தலைமையில்) |
| இரண்டாம் திருப்பலி : காலை 07.15 | இரண்டாம் திருப்பலி : காலை 07.15 |
| நன்றி வழிபாடு: 31.12.2014 மாலை 04.30 | |



அருள்ளாளர் யோசேப் வாஸ் அவர்களின் வாழ்வும் பணியும் பற்றிய கண்காட்சி கடந்த 6.12.2014 அன்று சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் அமைந்துள்ள டெய்சி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட இளவாலை மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி. இயூஜின் பிரான்சிஸ் கண்காட்சியைத் திறந்து வைக்கின்றார்.



யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் விடியல் இசைக்குழுவின் ஏற்பாட்டில் கடந்த மார்கழி 14ஆம் திகதி நடைபெற்ற அருட்பணி.சறத்ஜீவன் நினைவுக் கிறிஸ்மஸ் பாடல் போட்டி, இம்முறை மல்வம் பங்கு முதல் இடத்தைப் பெற்றுச் சென்றது.

## ஆசிரியரின் இதயத்திலிருந்து

குடும்ப வாழ்வில்
அர்ப்பண உணர்வுடன் வாழ
பிறக்கும் குழந்தை இயேசு
இப்புத்தாண்டில் ஆசீர்வதித்து
வழி நடத்துவாராக!
காவலன் வாசக நெஞ்சங்களை
வாழ்த்தி மகிழ்கின்றேன்

அருட்பணி.எஸ்.ஏ.றொஷான்
ஆசிரியர், பாதுகாவலன்





மார்கழி 15ஆம் திகதி கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் வருடாந்தம் நடைபெறும் குருக்கள், துறவிகளுக்கான நத்தார் கரோல் வழிபாட்டின்போது துறவற சபைகளைச் சார்ந்தவர்களும், குருக்கள் - குருமட மாணவர்களும் இணைந்து கீதம் இசைக்கும் போது...

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் [illegible] 360 [illegible] அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2014ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org